பெருமுக்கல் கல்வெட்டுகள்

தொகுத்தோர்

நடன. காசிநாதன்

இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

அர. வசந்தகல்யாணி

கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

தரமணி

சென்னை—600113

1998

தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு எண் : 140

முதற்பதிப்பு 1998 — 500 பிரதிகள்

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

பெருமுக்கல் கல்வெட்டுகள்

தொகுத்தோர்

நடன. காசிநாதன்
அர. வசந்தகல்யாணி

விலை ரூ.

அச்சிட்டோர்

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை
அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

அணிந்துரை

தமிழக வரலாற்றில் விழுப்புரம் மாவட்டம். திண்டிவனம் வட்டம், பெருமுக்கல் சிறப்பான இடம்பெறும் அளவிற்கு உயர்ந்து விளங்குகிறது. இங்குள்ள மலையில் காணப்பெறும் கீறல் உருவங்கள் கி.மு. 4000-ல் வழக்கிலிருந்த எகிப்திய நாட்டு ஹீரோக்ளிபிக் (Hieroglyphic) என்னும் எழுத்தின் சமகாலத்தது என்று சிலராலும், பெருங்கற் காலத்தைச் சார்ந்தது என்று சிலராலும், கி.பி. 6-7 - ஆம் நூற்றாண்டினது என்று சிலராலும் கூறப்பெற்று வருகின்றன. மேலும் இங்கு அமைந்துள்ள சோழர் காலக் கோயில் ஒன்றும் மற்றும் கோயில் சுவர், பாறை ஆகிய இடங்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளும் தமிழக வரலாற்றுக்குத் துணைபுரியும் முக்கியச் சான்றுகளாகக் காணப்படுகின்றன. இத்தகைய அரிய சான்றுகளைப் பெற்றுள்ள இம்மலையில் கல் உடைப்பதைத் தடுத்து நிறுத்த அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. மேலும் இங்கு அமைந்துள்ள கோயிலையும், கீறல் உருவங்களையும், கல்வெட்டுகளையும் அரசால் பாதுகாக்கப் பெறும் சின்னங்களாக அறிவிக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து இம்மலைக் கோயிலிலும், மலைப்பாறையிலும் மற்றும் இவ்வூரில் உள்ள கோயிலிலும், தனிக்கல்லிலும் காணப்பெறும் கல்வெட்டுகளை நன்கு படியெடுத்துப் படித்து நூலாக அச்சிட இத்துறை முயற்சி மேற்கொண்டது. அம்முயற்சியின் விளைவே இந்நூலாகும்.

‘பெருமுக்கல் கல்வெட்டுகள்’ என்ற பெயரில் வெளியிடப்பெறும் இந்நூலில் மொத்தம் 60 கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. இக்கல்வெட்டுகள் சோழர், பாண்டியர், காடவராயர், சம்புவரையர், விசயநகரவேந்தர் ஆகியோர் காலத்தில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் பழமையானதாகச் சோழ மன்னன் உத்தமசோழனின் கல்வெட்டைக் குறிப்பிடலாம். இம்மன்னன் காலத்திலேயே இங்கு ஒரு கோயில் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் இதைத் தற்போது காணமுடியவில்லை. இதற்கடுத்துப் பழமையானவை முதற்குலோத்துங்கன், விக்கிரமசோழன் காலத்துக் கல்வெட்டுகளாகும். இவற்றுள்ளும் விக்கிரமசோழன் காலத்துக் கல்வெட்டுகளே மிகுதியாகக் காணப்பெறுகின்றன. இம்மன்னன் காலத்தில்தான் மலைமேல் உள்ள திருவான்மிகை ஈசுரம் உடையார் கோயில் கற்றளியாகக் கட்டப்பெற்றுள்ளது. இக்கோயிலைக் கட்டுவதற்குப் பொருள் உதவி புரிந்த காக்குநாயகனின் உருவமும், அவனது கட்டளையை ஏற்றுக் கோயிலைக் கட்டிய பெரியான் திருவனான சிறுத்தொண்டனது உருவமும், கோயில் சைவாசாரியன் திருச்சிற்றம்பலமுடையான் அன்பர்க்கரசு பட்டனது

உருவமும் சிற்பங்களாக இக்கோயிலில் காணப்படுவது கோயில் கட்டடக்கலை வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

பெருமுக்கல் என்னும் இவ்வூர் சோழர் காலத்தில் "சயங் கொண்ட சோழ மண்டலத்து ஒய்மா நாடான விசையராசேந்திர வள நாட்டுப் பெருமுக்கிலான கங்கைகொண்டநல்லூர்" என்று வழங்கப் பெற்றுள்ளது. பெருமுக்கல் கங்கைகொண்ட நல்லூர் என்ற பெயர் மாற்றம் பெற்றது, 'கங்கை கொண்டான், கடாரங்கொண்டான்' என்ற விருதுப் பெயர்கள் பூண்டிருந்த முதலாம் இராசேந்திரன் காலத்தில் நிகழ்ந்திருக்கலாம்.

இந்நூலில் வெளியிடப்பட்டிருக்கின்ற கல்வெட்டுக்கள் பல அரிய செய்திகளை நமக்கு வாரி வழங்குகின்றன. அன்றைய சமுதாயத்தில் நில விற்பனை முறை எவ்வாறு இருந்தது, நிலத்தை அளக்கும் அளவு கோல்கள் எத்தனை அடி நீளத்தில் இருந்தன, கோயில் வழிபட்டு முறை எவ்வாறு இருந்தது, அவ்வழிபாட்டில் யார் யார் சிறப்பிடம் பெற்றிருந்தனர், வீதி உலாவுக்கு எடுத்துச் சென்ற தெய்வங்களில் நான்முகன், பெருமாள் இடம்பெற்றிருந்தமை போன்ற செய்திகள் நோக்கத்தக்கன. மேலும் நில விற்பனையின்போது எதிர்மொழி கூறி நிலத்தைப் பெறுவதற்கு இசைவு தெரிவித்தவர்களைக் கூறுகையில் அவர்கள் எந்த சமூகக் கூறைச் சார்ந்தவர்கள் என்பதைக் "**குடிப்பள்ளி** அருளாளன் பூமியான் திண்டிவனப் பேரரையன் (தொ.எண். 78/1962)"; **திரையன்** மாதேவடிகள் கங்கைகொண்டானான இராஜாதிராஜ வளவ தரையன்" (80/1992); **வெள்ளாளன்** அயிறூருடையான் சீராமன் ஆட் கொண்டானான எடுத்தபாதப் பேரரையன் (95/1992); **பெருநிலக் கிழான்** ஆதித்தன் பகவன் (96/1992) என்று கல்வெட்டுப் பகுதிகள் புலப்படுத்துகின்றன.

மேலும் சில புதிய செய்திகளையும் இவ்வூர்க் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. எடுத்துக்காட்டாக (1) ஆண்டைக் குறிப்பிட எழுத்துக் களைக் கொண்டோ சொற்களைக் கொண்டோ கணக்கிடும் முறைகளுள் ஒன்றாகிய "கடபயாதி" முறை ஒரு கல்வெட்டில் (98/1992) குறிக்கப் பட்டுள்ளது. (2) இராஜராஜ சம்புவராயனுக்குத் தொற்றிய வியாதி குணமாவதற்காக பணிப்பெண் ஒருத்தி உயிர் விட்டமைக்காக நிலக் கொடை அளிக்கப் பெற்றது தெரியவருகிறது (109/1992). (3) அரச குலப்பெண்ணுக்கும் வைசியகுல ஆணுக்கும் பிறந்தவர்களை 'உத்க்ருஷ்ட ஆயோகவர்' என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது (110/1992)

(4) நாட்டில் அறம் குறையக்கூடாது என்பதற்காகக் கோயிலில் 'அறமிறங்கா நாட்டுச் சந்தி' என்று ஒரு வழிபாடு திருமலைமேல் ஆளுடைய நாயனார்க்கு ஏற்படுத்தியமையை (121/1992) ஒரு கல்வெட்டு காட்டுகிறது. (5) ஒரு கல்வெட்டில் நிலம் ஏலம் விடும்போது எதிர்மொழி கூறியவன் 'நாந்நிறோ' என்று கூறியதாகக் காணப் பெறும் சொல் 'நான் இதோ' என்னும் பொருளைத் தருவதாக இருக்க லாம் (99/1992).

இக்கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறும் நாடு, ஊர் ஆகியவை பற்றிய விவரங்களும் ஆழ்ந்த ஆய்வுக்குரிய சான்றுகளாக விளங்கு கின்றன.

இதுவரை இத்துறை, கல்வெட்டுகளுக்கான குறிப்புரையைத் தமிழில் மட்டுமே தந்து வந்தது. இந்நூலில்தான் முதன்முதலாகத் தமிழோடு ஆங்கிலத்திலும் கல்வெட்டின் பொருளைத் தந்துள்ளோம். இம்முறை தமிழறியா வெளிமாநிலத்தவர்க்கும், வெளிநாட்டினர்க்கும் உதவுவதாக அமையும். ஆங்கிலப் பொருள் எழுதும் பணியை முதலில் இத்துறை இயக்குநரால் எழுதப் பெற்று அச்சாக்கப் பெற்றன. பின்பு இப்பணி இத்துறை கல்வெட்டியல் உதவிக் கண்காணிப்பாளர் முனைவர் மார்க்சியகாந்தி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் சில கல்வெட்டுகளுக்கு ஆங்கில குறிப்புரை எழுதினார். பின்னர் கல்வெட்டறிஞர் குடந்தை சேதுராமன் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அவர் தம் வணிகப் பணிகளுக்கிடையே சிறிதும் சிரமம் பாராமல் வெகு விரைவிலேயே தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை முடித்து தந்துதவி னார். அவருக்கு இத்துறை மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. இக்கல்வெட்டுக்கள் அனைத்தையும் படித்துத் தமிழில் குறிப்புரை தயாரித்து இயக்குநரின் மேற்பார்வைக்கு வைத்தவர் கல்வெட்டாய்வாளர் திருமதி ஆர். வசந்தகல்யாணி ஆவார்.

இந்நூலில் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து வந்த கல்வெட் டாய்வாளர் திருமதி. ஆர். வசந்தகல்யாணி, இளநிலைக் கல்வெட் டாய்வாளர் திரு. சீனிவாசன் ஆகியோருக்கும், கல்வெட்டியல் உதவிக் கண்காணிப்பாளர் முனைவர் மார்க்சிய காந்திக்கும் எம் நன்றி. இந்நூலைச் சிறந்த முறையில் அச்சாக்கியுள்ள துறையின் உதவிப்பணி மேலாளர் திரு. ச. செங்கல்வராயன் மற்றும் அச்சுப் பிரிவின் அலுவலர்கள் ஆகியோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	8
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1126
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	45 / 1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	1
மன்னன் :	விக்கிரமசோழன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் அர்த்தமண்டப வடக்குச்சுவர்

குறிப்புரை : ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஒய்மா நாடான விஜையராஜேந்திர வளநாட்டுப் பெருமுக்கிலான கங்கைகொண்ட நல்லூரர் ஊரார் தங்கள் ஊர் நிலம் குழி ஐநூற்று இருபதும், ஏரி வெள்ளத்தால் விழல் மண்டிக் கிடந்ததைத் திருத்திக் கொள்வீர் உளீரோ என்று கூற, இம்மொழி கேட்டுச் சோழ மண்டலத்து நித்த விநோத வளநாட்டு அரைசூர் அரைசூர் உடையான் உய்யவந்தான் அழகிய தேவன் எதிர்மொழி கொடுத்து அன்றாடு நற்காசு ஐந்தினை ஆவணக்களரியில் செலுத்தி அந்நிலத்தைத் திருமலைமேல் திருவான்மிகை ஈஸ்வரமுடைய மகா தேவர்க்கு மடப்புறமாகக் கொடுத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

இந்தக் கோயிற் கல்வெட்டுகளில் காணப்பெறும் நில விற்பனை பலவும் ஏலமுறையில் விற்பனை செய்தது போன்றுள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பாம். தற்காலத்து ஏலமுறை போன்று கூவியழைத்து அதற்கு ஒருவர் எதிர்மொழி கொடுத்து இசைவு தெரிவித்துப் பெற்றுக் கொள்வதாக உள்ளது என்பதும் நோக்கத்தக்கது.

Summary : It refers to the transactions of a land which was laid barren due to overgrowth of weeds by the overflowing water of the lake, by the villagers of Perumukkil alias Gangaikonda Nallur in Oymanadu alias Vijayarajendra Valanadu of Jayangonda Cholamandalam to an individual Araisur Udaiyan of Araisur in Nittavinoda valanadu of Chola Mandalam by auction in eighth regnal year of Vikramachola. (1126 A.D.) It is said that the purchaser had endowed this land to Tiruvanmigai Isvaramudaiyarof Perumukkil as Madappuram.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரம சோழ தேவற்(க்)கு யாண்டு அ ஆவது ஜயங் கொண்ட சோழ மண்டலத்து ஓய்மாநாடாந

2 விஜை[ய*] ராஜேந்த்ர வளநாட்டு பெருமுக்கிலாந கங்கை கொண்டா நல்லூர் ஊரோம் நிலவிலை ஆவணக் கை

3 எழுத்து எங்களூர் மேல் கழநியில் காரனை பிள்ளையார் திருத்தில் தென்வரம்புக்கு தெற்(க்)கும் இத்தேவர் தேவத[ா]

4 நம் மேல்கழனியில் கீழ்வரம்புக்கு கிழக்கும் தெற்கில் குமரன் செறுவில் மேல்வரம்புக்கு மேற்கும் பந்

5 நீரடிக் கோலால் தெந்கை வடக்கு கோல் உ௰அ கீழ்கை மேல்கை கோல் ௰அவொஃ[1] க்கு உட்படு குழி ௱உ௰

6 ஏரிகோளாய் விழலெழுந்து கிடந்தமையில் இந்நிலம் விற்(ப்)போம் இத்தொண்டு திருத்திக் கொள்வீர் உளீ

7 ரோவெந்று கூற இம்மொழி கேட்டு எதிர்மொழி குடுத்தோந் சோழ மண்டலத்து நித்த விநோத வளநாட்டு

8 அரைசூர் அரைசூர் உடையாந் உ[ய்*]ய வந்தாந் அழகிய தேவநேன் நான் கொண்டு இவ்வூர் மலைமேல் திருவா

9 ந்மிகையீஸ்வரமுடைய மஹாதேவர்க்கு மடப்புறமாக கொண்டு விடுவேந் முற்கூறிய கங்கைகொண்டாநல்லூர்

10 ஊரோம் எம்மி(ல்) விசைந்து [த*]ந்த நற்(ப்) பொருள் அன்றாடு நற்காசு ஒ ஆவணக் களியே கிழிகச் செல[2]க்கொண்டு

11 இதுவேய் பெறு மாவறுதிப்[3] பொருள் சிலவோலை ஆவதாகவும் இன் நிலத்தால் வந்த இறைமுறை சில்

12 விறை சோறுமாட்டு மற்றெப்பேர் பட்டுதும் கொள்ளக் கடவோமல்லா தோமாகவும் எங்களூர் இரண்டு பூ

13 வும் செய்யில் இதுவும் செய்து கொள்ளப் பெறுவதாகவும் இப்ப(ரி)[டி*] ஸம்ம[தி]த்து இந்நிலம் விற்றுக்குடுத்தோம்[4]

---

1. 18⅞க்கான குறியீடு
2. கிழிகைச் செலவு என்பது பதிவுச் செலவு எனக் கொள்ளலாம்.
3. பொருள்மாவறுதி பொருட் செலவோலை என்று இருத்தல் வேண்டும்.
4. கல்வெட்டின் இறுதிப்பகுதி முடிக்கப்பெறவில்லை.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	2
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1135
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	2
மன்னன் :	இரண்டாம் குலோத்துங்கன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் அர்த்தமண்டப வடக்குப் பட்டிகை.

குறிப்புரை : இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய இரண்டாவது ஆட்சியாண்டில் ஜயங் கொண்ட சோழமண்டலத்து ஒய்மா நாடான விஜயராஜேந்திர வளநாட்டுப் பெருமுக்கலான கங்கை கொண்ட நல்லூர் ஊரார் 'பன்னீரடிக் கோலால் இருநூற்றைம்பது குழிநிலம் விற்றுத்தருகிறோம், அந்த நிலத்தைக் கொள்வீர் உளீரோ' என்று கேட்க, இம்மொழி கேட்டுச் சோழமண்டலத்துக் கூற்றூர் இருக்கும் வெ ... யனூருடையான் மகன் ஆண்டமை திருவுடையான் என்பவன் எதிர்மொழி கொடுத்து, அந்நிலத்தை வாங்கித் திருமலை மேல் திருவான் மிகை ஈஸ்வரமுடையார் கோயிலில் இவனே எழுந்தருளுவித்த பாசுபத மூர்த்தி களுக்குத் திருப்படி மாற்றுக்கு உடலாகக் கொடுத்தான் என்பதை இக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

இதில் கங்கைகொண்டநல்லூர் ஊரார் திருவான்துகை ஈஸ்வரருக்கு விளக்குப் பட்டி நிலம் இல்லாமையால், நிலம் விற்றுத் தருகிறோம் என்று நிலத்தை ஏலம் விட்டனர். ஆயின் ஆண்டமைதிருவுடையான் என்பவன் அந்நிலத்தை வாங்கித் தாஸ் எழுந்தருளுவித்த பாசுபதமூர்த்திகளுக்குத் திருப்படி மாற்றுக்குக் கொடுத் துள்ளான் என்று அறிகிறோம்.

Summary : Begins with the historical introduction *Pumevi Valara* etc of the king Kulottunga II (1133-50)

It refers to the transaction of a land by the villagers of Perumukkal alias Gangaikonda Nallur in Oymanadu alias Vijayarajendra Valanadu of Jayangonda Cholamandalam to Andamai Thiruvudaiyan an individual of

Kurrur in Cholamandalam, by auction. The purchased land had been endowed with Thiruvanmigai Isvaramudaiyar, as capital to meet the expenses of Thiruppadimarru of Pasupathamurthi which was installed by him.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்தி ஸ்ரீ** பூமேவி வளர திருப்பொநமாது வளர நாமேவு கலைமகள் நலம்பெரிது சிறப்ப இசையின் செல்வியும் எண்டிசை விளங்க விசைய மாமகள் வெல்புயந்திருப்ப திருபா வந்திறைஞ்ச நீனில மடந்தையைத் திருமணம் புணர்ந்து சீர்வளர் தருமம் அணிமுடி கவித்தென மணிமுடி சூடி மல்லை ஞாலத்துப் பல்லுயி ரெ[ல்]லா மெல்லையி லின்ப மியல்வினி லெய்த [வாழி] பல்லூழி ஏழ்கடல் புணர்க்கினும் கோடாச் செந்தனிக் கோலிநிதுலாவ செம்

2 பொந் வீரஸிம்ஹாஸத்துப் புவன முழுதுடையாளொடும் வீற்றிருந் தருளிய கோவிராஜகேஸரி பந்மரான த்ரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ௨ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஒய்மானாடான விஜயராஜேந்திர வளநாட்டுப் பெரு முக்கலாந கங்கை(க்) கொண்டா னல்லூர் ஊரோம் எங்களூரில் திருமலைமேல் திருவான்மிகை ஈஸ்வரமுடையார் விளக்குப்பட்டி[நிலமி] லாமைக்கு வடக்கில் தடிக்கு வடக்கடை(ய்)ய பன்னீரடிக் கோலால் குழி ௨௱

3 ம இருநூற்றைம்பதும் விற்றுத்தரக் கொள்வீருளீரோ வென்று கூற இம்மொழி கேட்டு எதிர்மொழி குடுத்தேன் சோழமண்டலத்து கூற்றூரி ருக்கும் வெ ... யனூருடையான் மகன் ஆண்டமை திருவுடையானேன் நானிறோ[1] இந்நிலங் கொண்டு திருமலைமேல் திருவான்மிகை ஈஸ்வர முடையார் கோயிலில் நான் எழுந்தருளிவித்த பாசுபதமூர்த்திகளுக்கு திருப்படி மாற்றுக்கு உடலாக கொண்டு விடுவனேன் முற்கூறிய பெருமுக்கலூரோம் பிற்கூறிய

4 [ஆ]ண்டமை திருவுடையானிடையில் எம்மிலிசைந்த விலைப் பொரு ளன்றாடு நற்காசுமிட்டு ஆவணக்களியே கிழிகைச் செலக்கொண்டு பொருளறக் கொண்டு விலையற விற்று குடுத்து இதினால் வந்த சில்லிறை சோறுமாட்டு இறைமுறை எப்பேற்பட்டதும்[2]

---

1. 'நான் இறோ' என்பது நான் இதோ இருக்கிறேன், என்ற பொருளில் பயன்படுத்திய தாகக் கொள்ளலாம்.

2. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

மாவட்டம் : தென்னார்க்காடு
வட்டம் : திண்டிவனம்
ஊர் : பெருமுக்கல்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : விக்கிரம சோழன்

ஆட்சி ஆண்டு : 8
வரலாற்று ஆண்டு : கி.பி. 1126
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 3

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் அர்த்த மண்டப வடக்குப்புற முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை : சோழ மண்டலத்து நித்த விநோத வளநாட்டு அரசுருடையான் உய்யவந்தான் அழகிய தேவன் என்பான் பழமுக்கில் ஊரார் பக்கல் ஐநூறு குழி நிலம் பெற்றுத் திருவான்மிகை ஈஸ்வரமுடைய மகாதேவர் நடுவுத்சவத்தில் (நடுவிற் சபை) கூத்தாடும் தேவர்க்குச் சாந்து சாத்துகைக்கும் அற்றை நாளைக்கு வேண்டும் தேவைகளுக்குமாகத் தானம் அளித்துள்ளான். இந்த நிலமானது பன்னீரடிக் கோலால் அளக்கப்பட்டது. இக்கல்வெட்டு விக்கிரம சோழனின் எட்டாவது ஆட்சியாண்டில் வெட்டப்பட்டது.

Summary : A record engraved in the eighth regnal year of the Chola king Parakesarivarman alias Tribhuvanachakravartin Sri Vikramacholadeva (1126.A.D.)

It refers to the sale of land by the villagers of Palamukkil to Arasurudaiyan uyyavandan Alagiyadevan of Nittavinoda valanadu in Cholamandalam, who donated it to Thiruvanmigai Isvaramudaiyar, for meeting the expenses of applying sandal paste and other related offerings during the festival day of Kuttadumdevan of Tiruvanmigai Isvaramudaiya Mahadevar.

கல்வெட்டு .

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணர புவிமாது வளர நாமாது விளங்கச் சயமாது விரும்ப பன்னிரு மலரு மன்னவர் சூடச் செங்கோல் சென்று திசை

தொறும் வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யறன் தழைப்பக் கலிங்க மிரியக் கடல்மலை நடாத்தி வலங்கொள்ளாழி வ

2 ண்டமி . . . . . சுடரளவுமொருகுடை நிழற்றி விஜைய ஸிம்ஹ[ா]* ஸநத்[து] [மு]க்கோட்கிழா நடிகளோடும் வீற்றிருந்தரு[ளி]*ய கோப்பர கேசரி பன்மராந திரி[புவனச்சக்கர]வர்த்திகள் ஸ்ரீவி[க்கிரமசோ]ழ தேவற்கு யாண்டு அவது ஜயங்கொண்ட சோழ மண்டலத் தோமா[1] நாடான விஜை

3 யராஜேந்த்ர வளநாட்டுப் பெருமுக்கில் நாட்டுப் பழமுக்கில் ஊரோம் சோ[ழமண்டல]த்து நித்த விநோத வளநாட்டு அரசூருடையான் உய்ய வந்தான் அழகிய தேவனுக்கு [வி]ற்றுக் குடுத்த [நிலமா]வது கீழ்பாற் கெல்லை ம— பெரு மாசெறுவுக்கும் தென்பாற் கெல்லை வாய்க்காலுக்கு

4 வடக்கும் மேல் பாற்[கெ*]கல்லை திண்டந் பட்டிக்கு கிழக்கும் வடபாற் கெல்லை கற் . . . . ன் வரம்புக்குத் தெற்(க்)கும் இன்நாற்பாற் கெல்லை உள்ளும் உட்பட நிலம் பன்[னீ]ரடிக் கோலால்குழி ஐந்நூறும் மலை மேல் திருவான்மிகை ஈஸ்வர(ம்)முடைய மஹாதேவர் நடுவுற்ஸபத்தில்[2] கூத்தாடுந் தேவர் தி

5 ரு சாந்து சாத்துகைக்கு அற்றை நாளைக்கு வேண்டுங் குறை விறுப்புக்கு நாங்கள் இவழகிய தே[வ*]நுக்கு விற்றுக் குடுத்து எம்மில் இசைந்த விலைப்பொருள் கை அறக் கொண்டு விலைக்கற விற்றுக் கு[டு*]த்தோம். இன்னிலத்துக்கு தலைபா கடைநீர் பாச்சப் பெறுவதாகவும் சில்வரி சோறுமாட்டு வெட்டிமுட்டையாள் இறை

6 முறைமைக் காட்டக் கடவோமல்லாதோமாக ஸம்மதித்து இந்த அழகிய தேவநுக்கு விற்றுகு[டு]த்தோம். பழமுக்கில் ஊரோம் ஊர்க் கணக்கு தோசிகன் சடைகோபநு[ம்] உலகிநிய நின்றான் எழுத்து இது **பன்மாஹேஸ்வர** ரக்ஷை.

---

1. தோய்மா நாடான என்றிருத்தல் வேண்டும்.
2. நடுவிற் ஸபையில் என்றிருக்கலாம்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	16
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1162
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	46 of 1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	4
மன்னன் :	இரண்டாம் இராஜராஜன்		

இடம் ; முக்யாசலேசுவரர் கோயில் அர்த்தமண்டப வடக்கு, மேற்கு முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை : *திருவான்மிகை ஈஸ்வரமுடையார் கோயிலைச் சேர்ந்த தேவரடியாள் ஆண்டங்கை மகள் குலோத்துங்க சோழ மாணிக்கத்தின் மகள் சிவன் பாகங் கொண்டாளான வீரபத்திர நங்கை இக்கோயில் நாயனார்க்குத் திருநுந்தா விளக்கொன்று எரிப்பதற்காக முப்பத்திரண்டு பசுக்களையும் ஓர் எருதையும் தானமாக அளிக்கிறாள். கோயிற் சிவப்பிராமணர் இத்தானத்தைப் பெற்றுக் கொண்டு சந்திரசூரியர் உள்ளவரை ஒரு விளக்கு எரிக்க உடன்பட்டதை இக் கல்வெட்டு தெரிவிக்கிறது. கோயில் தேவரடியாரின் மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த பெண்களின் பெயர்கள் குறிக்கப்பட்டிருப்பது சிறப்பாக உள்ளது. இக்கோயிலுக்குத் தொடர்ந்து தேவரடியார் பெண்கள் இருந்து கோயில் வழிபாட்டிற்கு ஏற்றம் அளித்துள்ளனர் என்பதும் இதன்மூலம் அறியமுடிகிறது.*

Summary : Begins with the introduction "Pumaruviya Thirumadhum" of the king Tribhuvana Chakravartigal Rajarajadeva II (1146-72) Records the gift of 32 cows and an ox for a lamp by Sivan Bhagamkondal alias Virabhadranangai, daughter of Kulottunga chola Manikkam who in turn was the daughter of Andangai, a Tevaradiyar (Temple servant) of the temple. Noteworthy in this inscription is the mention of the mother and grandmother of the donor.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதும் ஜயமாதும் நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்து புல்க அருமறை [விதி] நெறியனைத்துந்**

தழைப்ப வருமுறை யுரிமையில் மணிமுடி சூடித் திங்கள் வெண்குடைத் திகைக்க

2 ஞூறெட்டுந் தங்கு தநிக் கூடந் தானென விளங்கக் கருங்கலிப் பட்டியைச் செங்கோல் துரப்பப் பொருகதிராழி புவிவளந்துடந்(துடந்) வரப் புல்லவாநுதல் யாரத்து வராபனிய ஒன்னருங் கற்பும் மண்மிசை நடாத்தி எண்ணருங் கற்பும்

3 மண்ணகம் பிறந்து செம்பெ[ப]ொந் வீரஸிம்ஹாஸ[ந]த்துப் புவந முழுதுடை யாளொடும் வீற்றிருந்தருளிய கோபரகேசரி பந்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு ௰௬ வது ஜயங்கொண்ட சோழமண்டலத்து

4 ஓய்மா நாடான விசை[ய]* ராஜேந்த்ர வளநாட்டுப் பெருமுக்கலான எதிரிலி சோழ நல்லூர் உடையார் திருமலை மேலாளுடைய நாயனார் திருவாந்மீஸ்வரமுடையாற்கு இக்கோயில் தேவரடியாள் ஆண்டங்கை மகள் குலோத்துங்கசோழ மாணிக்கத்திந் மகள்

5 சிவன் பாகங் கொண்டாளான வீரபத்திர நங்கை இந்நாயனாற்கு வைத்த திருநுந்தா விளக்கு ஒன்று ஒன்றுக்குந் நாந் விட்ட பசு ௬௰உ இஷபம் க இவள் வீரபத்திர நங்கை வைத்த திருநுந்தா விளக்கு நற்பசுக் கைக்கொண்டு சந்திராதித்தவரை செலுத்தக் க

6 டவோமாநோம் இக்கோயில் காணி உடைய சிவப் பிராமணரோம் இது ஸந்திராதித்த வரை பன்மாஹேஸ்வரர் ர(க்)க்ஷை.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	7
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	43 of 1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	5
மன்னன் :	விக்கிரமபாண்டியன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் அர்த்த மண்டப வடக்குச்சுவர்.

குறிப்புரை : பெருமுக்கில் திருமலை உடையார் ஸ்ரீவால்மீகீஸ்வரமுடைய நாயனார் குடி நீங்காத் தேவதானமும், அளம் ஒன்றும் பல்லவன் கோப்பெருஞ்சிங்கன் காலம் முதல் வரம்பும் கரையும் அழிந்து பாழாகக் கிடந்தது. அந்நிலத்தை முன்பு அனுபவித்து வந்த குடிநீங்காத் தேவதானம் நீக்கி இவ்விறைவனுக்கே திருநாமத்துக் காணியாகத் தந்தனர், ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஒய்மா நாடான விஜயராஜேந்திர வளநாட்டு மரக்கானத்து ஊரவர். இதற்குச் சாட்சியாக முப்பதுபேர் கையெழுத்திட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. விக்கிரம பாண்டியனின் ஏழாவது ஆட்சியாண்டில் இந்தக் கொடை வழங்கப் பட்டுள்ளது. திருவான்மிகை ஈசுவரர் என்று வழங்கப்பட்ட இவ்விறைவன் பெயர் இக்கல்வெட்டில் ஸ்ரீவால்மீகீசுவரமுடைய நாயனார் என்று குறிக்கப் படுகிறது.[1]

Summary : A record written in the seventh regnal year of the Pandya king Maravarman Tribhuvana Chakravartigal Vikramapandyadevar. Registers the gift of salt pan which was laid barren due to the damages of boundaries and bank from the period of Kopperunjinga, a Pallava, converting the Devadanam into Tirunamattukkani, by the villagers of Marakkanam in Oymanadu alias Vijayarajendra Valanadu of Cholamandalam.

In this inscription the name of the god is mentioned as Valmikisvaramudaiya Nayanar. Valmikisvarar is the corruption of 'Vanmikai Isvarar'.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான த்ரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீவிக்ரம பாண்டிய

2 தேவர்க்கு யாண்டு எ-ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா

3 னாடான விசைய ராசேந்திர வளநாட்டு மரக்கானத்து ஊரவரோம் புத்தூரான

4 உத்தம சோழப் பேரளத்துப் பாண்டியராயன் வாய்க்கா லளத்துக்குக்

5 கிழக்குத் திருமலைச் சொக்கன் என்று பேர் கூவப்பட்ட அளம்

6 ஒன்றும் பெருமுக்கில் திருமலையில் உடையார் ஸ்ரீவால்மீகீஸ்வரமுடைய நா

7 யனார் குடிநீங்காத் தேவதானம் நெடுநாள்ப்பட அனுபவித்துப் போந்து

8 பல்லவன் கோப்பெருஞ்சிங்கர் நாள் துடங்கி வரம்புங் கரையும் அழிந்து பாழ்

9 கிடக்கையில் இவ்வாண்டைப் பங்குனி மாதமுதல் குடி நீங்காத் தேவ தானங் கழித்து

10 இன்னாயனார்க்குத் திருநாமத்துக் காணி ஆகத் தந்தோம் மரக்கானத்து ஊரவரோம்

11 இவை அணுக்கப்பல்லவரையன் எழுத்து செம்பியன் பல்லவரையன் எழுத்து தென்னவதரை

12 யன் எழுத்து வாளுவராயன் எழுத்து மழவராயன் எழுத்து தேவர் கண்டன் எழுத்து குருகுலராயன் எழு

13 த்து செம்பியதரையன் எழுத்து மீனவன் மூவேந்த வேளான் எழுத்து செழியரையன் எழுத்து விசை

14 யராயன் எழுத்து திண்டிவனமுடையான் எழுத்து வானவன் விழுப் பரையன் எழுத்து தேவாண்டை

15 எழுத்து விக்கிரம சோழப் பட்டின னாட்டு வேளான் எழுத்து குலோத்துங்க சோழப் பட்டின னாட்

16 டு வேளான் எழுத்து குன்றமெடுத்தான் எழுத்து திருவண்ணாமலை யுடையான் எழுத்து குருகுலரா

17 யன் ஆதிபுருஷன் எழுத்து இராசமாணிக்கப் பல்லவரையன் எழுத்து அருள்மொழிப் பல்லவரையன் எழுத்து.

18 பட்டின னாட்டு வேளான் எழுத்து தென்னவராயன் எழுத்து இரா[ச*] ரா[ச*]ப் பட்டின னாட்டு வேளான்

19 எழுத்து வில்லவன் விழுப்பரையன் எழுத்து திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து அகளங்கப் பல்

20 லவரையன் எழுத்து சிவக்கொழுந்தன் இராசேந்திர சோழ விழுப் பரையன் எழுத்து அரையன்

21 திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து அரும்பாக்கிழான் எழுத்து நல்லாதன் திருவண்ணாமலையுடையான் மழவராயன் எழுத்து

---

1. வான்மிகை ஈஸ்வரர் என்பது பின்னாளில் வால்மீகீஸ்வரர் என்று மருவி வழங்கியுள்ளது

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	5
வட்டம் ;	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1071
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	44 of 1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	6
மன்னன் :	இரண்டாம் இராஜாதிராஜன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் அர்த்தமண்டப மேற்குச்சுவர்.

குறிப்புரை : இரண்டாம் இராஜாதிராஜ சோழனுடைய ஐந்தாவது ஆட்சியாண்டில் நடுவில் நாட்டு வாகூர் உப்படு குடிகுத்துவான் பதாளி கோமணி ஆந அம்மை அப்பகோன் என்பான் திருவான்மீசுவரமுடைய மகாதேவர்க்குத் திருநுந்தா விளக்கொன்று எரிப்பதற்கு முப்பத்திரண்டு பசுக்களும் ஓர் எருதும் அளித்துள்ளான் என்பதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

Summary : The record of Rajadhiraja II (1071 A.D.) is written in his 5th regnal year. It refers to the gift of 32 cows and one bull (Rishaba) for a perpetual lamp by Pathalikomani alias 'Ammaiappakon' of Naduvilnadu to Aludai Thiruvamiswaramudaiyar.

கல்வெட்டு :

1 கடல் சூழ்ந்த பார்மாதருஞ் சீர்மாதரும் வந்து வாழ நாற்கடல் சூழ்

2 புவியேழும் பாற்கடல் பொற்புகழ் பரப்பி ஆதிஉகமாம் மேந்த

3 ச் சோதி மணிமுடி கவித்தருளி தெநலரும் சேரலரும் சிங்க[ள]ரும்

4 முதலாய மந்நவர்கள் திறை குடந்து சே(ய்)விப்ப வாழி வாழி செங்கோல்

5 மூவ(ர)ரும் இநிதிருப்ப உலகுடைய முக்கோக் கிழாநடிகளோடு வீற்றி

6 ருந்தருளிய ஸ்ரீ இராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு அஞ்சாவது ஜய

7 ங்கொண்ட சோழமண்டலத்து ஓ[ய்]*மா நாடாந விசையராஜே[ந்]*திர வ

8 ளநாட்டு பெருமுக்கிலாந கங்கைகொண்டா நல்லூர் திருமலைமேல்

9 ஆளுடைய திருவாமீசுரமுடையார் மஹாதேவற்கு நடுவி நாட்டு வாகூர் உப்

10 படு குடிகுத்துவாந் பதாளி கோமணி ஆந அம்மை அப்பகோந் வைத்த

11 திருநுந்தா விளக்கு ஒன்றுக்கும் விட்ட சாவா மூவா பெரும் பசு முப்பத்திரண்

12 டும் இஷப எருதொன்றும் கைக்கொண்டு சந்திராதித்தவரை எரிக்க [க]*

13 டவோம் திருவுண்ணாழிகை ஸபையோம் இவை பந்மாஹேசுவ

14 ர[ர]*க்ஷை

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	5
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1171
ஊர் :	பெருமுக்கல்		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	39 of 1905
எழுத்து :	தமிழ்	முன்பதிப்பு :	—
அரசு :	சோழர்		
மன்னன் :	இரண்டாம் இராஜாதிராஜன்	ஊர்க் கல்வெட்டு எண்	7

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை வடக்குச்சுவர்.

குறிப்புரை : *திரு இடைக்கழி நாட்டுக் கூற்றூர்க் கோயிலைச் சார்ந்த பணிப்பெண்ணான நாச்சி மகள் கூத்துகந்தாள் என்பாள் பெருமுக்கில் திருமலைமேல் ஆளுடையார் திருவான்மீசுவரமுடைய மகாதேவர்க்குத் திருநுந்தா விளக் கொன்று எரிப்பதற்காக முப்பத்திரண்டு பசுக்களும் எருது ஒன்றும் அளிக்க, கோயிற் சிவப்பிராமணர் அதனைக் கைக்கொண்டு விளக்கெரித்த செய்தியினை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.*

Summary : A record of Rajadhiraja II written in his fifth regnal yaer, refers to an agreement of Sivabrahmanar after receiving the endowment of 32 cows and one bull for burning perpetual lamp to Aludaiyar Thiruvanmisvaramudaiya Mahadevar of Perumukkal made by an individual Kuttuganthal the daughter of Nachi of Kurrur situated in Thiruvidaikalinadu of Jayangondachola Valanadu of Cholamandalam.

கல்வெட்டு :

1 கடல் சூழ்ந்த பார் மாதருஞ் சீர் மாதரும் வந்து வாழ்க நாற்
2 கடல் சூழ் புவியேழும் பாற்கடல் பொற்புகழ் பரப்பு ஆதி
3 யுகம் ஆமெந நச்சோதி முடி கவித்தருளித் தென்னவரும்
4 சேரலரும் சிங்களரும் முதலாய மன்நவர்கள் திறைகுண

5 ந்து வந்தீண்டிச் சேவிப்ப வாழி ஊழி செங்கோல்
6 எழு பாரும் இனிதளிப்ப செம்பொந் வீரஸிம்ஹாஸன
7 த்து உலகுடை முக்கோக் கிழாநடிகளோடு வீற்றிருந்தருளிய
8 கோவி ராஜகேசரி பந்மரான த்ரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீராஜ
9 [ா]திராஜ தேவற்கு யாண்டு ௫வது பெர் நாயற்று ஜயங்கொ
10 ண்ட சோழ மண்டலத்து ஒா[1]ய்மானாடான விஜை[ய]* ராஜேந்த்ர
11 வளநாட்டு பெருமுக்கிலான கங்கை கொண்ட நல்லூர் திரு
12 மலைமேல் ஆளுடையார் திருவான்மீஸ்வரமுடைய மஹாதேவ
13 வற்கு சோழமண்டலத்து ஜயங்கொண்ட சோழ வளநாட்டு திரு
14 விடைக் கழி நாட்டுக் கூற்றூர் பரிகிரகத்து நாச்சிம
15 கள் கூத்துகந்தாளேந் வைய்த்த திருநுந்தா விளக் கொன்றுக்
16 கு விட்ட பசு ௯௰௨ இஷப எருது ஒன்று கை கொண்டு சந்திராதித்
17 தவரை இத்திரு நுந்தா விளக்கொன்றுஞ் செலுத்த கடவொமா
18 க கைய் கொண்டோம் இக்கோயிலில் சிவப்ர[ா]*ஹ்மணரோம் இது.

---

1. வரி 10-இல் ஓய்மா நாடு என்று ஓகாரம் எழுதவேண்டிய இடத்தில் குறில் எழுதப் பட்டுக், கால் இடப்பட்டு, ஒா என்று எழுதப்பட்டுள்ளது என்பது நோக்கத்தக்கது.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-13ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	8
அரசு :	—		
மன்னன் :	—		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை வடக்குச்சுவர்

குறிப்புரை : கோயில் பிராமணன் ஒய்மா நாட்டு நடுவறியும் பெருமாள் என்பவன் பிரம்மாவைச் செய்தளித்த செய்தியை இக்கல்வெட்டு குறிக்கிறது.

Summary : It records the installation of an image of Brahma by Naduvariyum Perumal a Sivabrahmana of this temple.

கல்வெட்டு :

1 இக்கோயில் சிவப்ராஹ்மணரில் ஓய்மானாட்டு

2 நம்பி நடுவறியும் பெருமாள் ஏறிஅருளப்[1] பண்ணின ப்ரஹ்மா.

---

1. 'ஏறி அருள' என்று குறிப்பிடுவதால் இது உற்சவமூர்த்தியான பிரம்மா திருமேனி என்று கொள்ளலாம்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	4
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 14-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சம்புவராயர்	ஊர்க்கல்வெட்டு எண்	9
மன்னன் :	இராசநாராயணன்		

இடம் : *முக்யாசலேசுவரர் கோயில் கருவறை வடக்குச்சுவர், முப்பட்டைக் குமுதம்.*

குறிப்புரை : *ஒய்மா நாட்டுக் கிடங்கில் பற்று பெருமுக்கில் உடையார் திருமலைமேல் ஆளுடையார்க்குப் பூசை, திருப்பணிக்கு ஒய்மா நாட்டு இன்கரைக்காட்டுப் பற்றில் கூத்தப்பாக்கம் என்ற ஊரைச் சர்வமான்யமாக, இறையிலி தேவதான மாக அளித்துள்ளான் இராசநாராயண சம்புவராயன் என்பது இக்கல்வெட்டால் அறியப்படுகிறது.*

Summary : Records the gift of land of Kuttappakkam belonging to Inkaraikkattup-parru of Oymanadu to Udaiyar Tirumalaimel Aludaiyar of Perumukkil of Kidangil Parru in the same Nadu as Sarvamanya by Rajanarayana Sambuvaraya in his fourth regnal year.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ சகலலோக சக்[ர]*வத்தி இராசநாராயணன் சம்புவராயன் யாண்டு ச நாலாவது ஒய்மா நா[ட்]டு*

2 கிடங்கில் பற்று பெருமுக்கில் உடையார் திருமலைமேல் ஆளுடைய நாயனார்க்கு பூசை திருப்பணிக்கு

3 இன்னாட்டு இன்கரைக் காட்டு பற்றில் கூத்தபாக்கம் இவ்வாண்டை ஆடிமாதம் முதல் அனைத்து ஆயமும் இழக்க

4 தேவதானம் **ஸர்வமான்யமாக** முதலடங்க இறைஇலி **சந்திராதித்ய** வரையும் நடப்பதாக குடுத்தேன் பெருமுக்கில் உடையார்

II 5 திருமலைமேல் ஆளுடைய நாயனார்க்கு இராசநார[ா]*யணன் சம்புவராயனேன் இந்த **தம்மம்** அழிவு

6 செய்தவன் **கங்கை குமரி** இடை செய்தார் செய்த பாவம் கொள்வான்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	10
அரசு :	சோழர்		
மன்னன் :	விக்கிரமசோழன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை வடக்கு மேற்குப் பட்டிகை.

குறிப்புரை : பெருமுக்கில் நாட்டு நல்லாலத்தூர் ஊரார் பன்னீரடிக் கோலால் ஐநூறு குழி நிலமும் கிணறும் விற்றுத்தரக் கொள்வீர் உளீரோ என்று கூற இம்மொழி கேட்டு ஓகூர் குடிப்பள்ளி அருளான் பூமியான் திண்டிவனப் பெரியரையன் என்பான் எதிர்மொழி கொடுத்து அந்நிலத்தை வாங்கித் திருமலை மேல் திருவான்மிகை ஈஸ்வரமுடையார்க்குத் திருமந்திரப் போனகப் புறமாக விட்ட செய்தி இக்கல்வெட்டால் அறியப்படுகிறது.

Summary : It begins with the historical introduction "Pumadhu Punara Puvimadhu valara" of the chola king. The portion wherein the name of the king and his regnal year are written found obliterated in the inscription. This record refers to a transaction made in the system of auction of a land measuring to 500 kuzhi and a well between the residents of Nallalathur in Perumukkil nadu and Arulan Boomiyan Tindivana Peraraiyan of Okur. The purchaser endowed this land with Thiruvanmigai Isvaramudaiyar for offering Tirumandirapponagam.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணர புவிமாது வளர நாமாது விளங்[க*] செயமாது விரும்ப கந்தி பது மலர் மன்னவர் சூ

2 ட[வு*]ம் ஏனய உரிமையிலட ரெழ முடிசூடிச் செங்கோல் செந்று திசை தொறும் வளற்ப்ப வெங்கலி நீக்கி மெயறன் தழைப்பக் கலிங்கமிரிய கடல்மலை

3 நடாத்தி வலங் கொள்ளாழி வரையாழி நடாத்தி இரு சுடரளவும் ஒரு குடை நிழற்றி செம்பொன் வீர சிங்காசனத்து திரிபுவன மு

4 முதுடையா(ள்)ளொடு வீற்றிருந்தருளிய கோவிராச கேசரிபர் ....

5 ஒர்மா நாடான விசைய ராஜேந்த்ர வளநாட்டு பெருமுக்கில் நாட்டு நல்லாலத்தூரோம் எங்கள்ளூர் வடகழநியில் திருமலை மேல் திருவான் மி(யி)கை

6 ஈசுரமுடையார் தேவதாநத்துக்கு கிழக்கும் இத்தேவதாநத்துக்கு வடக்கும் இத்தேவர் தாநத்துக்கு தெற்கும் [ம*]ருத்து செறுவுக்கு மேற்க்கு இந்நாற்பா

7 ல் எல்லைக்குள்ளு தடி பலவிநால் மெஉக் கோலால் குழி ஙாம் கிணறும் விற்றுத் தரக் கொள்வீர் உளீரொ என்று கூ(ந)[ற*] இம்மொழி கேட்டு எதிர் மொழி குடு

8 த்தோந் ஓகூர் குடிப்பள்ளி அரு(ள்)ளான் பூமியான் திண்டிவனப் பெரியரையன்நேன் நான் நிறொ இன் நிலங் கொண்டு திருமலை மேல் திருவான்மிகை ஈ

9 சுவரமுடையார்க்கு திருமன்திர போநகப்புற(ம்)மாக கொண்டு விடுவன்நேந் முற்கூறிய நல்லாலத்தூரோம் பிற்(க்) கூறிய திண்டிவநப் பெரியரையந்

10 நேன் இடையில் எம்மில்லி*

---

* கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	12
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	11
அரசு :	—		
மன்னன் :	—		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை வடக்கு மேற்குப் பட்டி.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டுகள், ஏதோ ஒரு காலகட்டத்தில் செய்யப்பட்ட திருப்பணியின் போது மாற்றி வைத்துக் கட்டப் பட்டிருக்கலாம். கி.பி. 11, 12, கி.பி. 15-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளின் பகுதிகள் இவற்றில் காணப்படுகின்றன. முதற்துண்டில் பிரமராயன் என்பவன் பெருமாளை எழுந்தருளுவித்த செய்தி காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு வரியும் தனித்தனித் துண்டுகளாகும்.

Summary : Six fragmentary inscriptions, assignable to 11th, 12th and 15th centuries. In one fragment it is stated that an individual Brahmarayan had set up the figure of Perumal (Vishnu). Another fragment mentions probably the king Vikramachola and his 12th regnal year. Of the remaining four three are mentioning the boundaries of the gifted land. The fourth states the name Bhattan Abaranamiyan.

கல்வெட்டு

1 . . . ம சோழ தேவற்கு யா[ண்*]டு ௰௨ பந்திரண்டாவது ஜயங் கொண்ட சோழ மண்டலத்து ஒய்மாநாடாந வின . . .

2 . . . பபட்டன் ஆபரணமியன் . .

3 . . . பிரமராயன் எறியருள பண்ணின பெருமாள் . . .

4 . . . ம்புக்கு தெற்கும் இதுவே பற்றிக் கிழக்கு நோக்கிப் பொ . . .

5 . . ம் பட்டை கழுவல் மேல் வரம்புக்கு மேற்கும் இங்கு நின்று இராஜ . . .

6 . . . குரின்றும் இவ்வாய்க்கால் கிழக்கு நோக்கி வஞ்சி . . .

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	9
வட்டம் ;	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1127
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	41 of 1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	12
மன்னன் :	விக்கிரம சோழன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை மேற்குச்சுவர்.

குறிப்புரை . பெருமுக்கிலான கங்கைகொண்ட நல்லூர் ஊரவர் தங்களூர் நிலத்தில், பன்னீரடிக் கோலால் அளக்கப்பட்ட ஐநூறுகுழி நிலத்தை விற்றுத்தரக் கொள்வீர் இல்லையோ என்று கூற, அவர்கள் கூறிய மொழிகேட்டுச், செம்பூர்க் கோட்டத்துப் புறையூர் நாட்டுச் செய்யூரான ஜயங்கொண்ட சோழ நல்லூரைச் சார்ந்த திரையன் மாதேவடிகள் கங்கை கொண்டானான இராஜாதிராஜ வளவதரையன் என்பான் எதிர்மொழி கொடுத்து, ஐநூறுகுழி நிலத்தையும் பெற்றுக்கொள்ள இசைவு தெரிவிக்கிறான். இராஜாதிராஜ வளவதரையனும் மேற்படி ஊரவரும் தம்முள் இசைந்து, அன்றாடு நற்காசு ஐந்தினை அவன் கொடுத்து நிலவிலை ஆவணஞ்செய்து, திருமலை மேல் திருவான்மிகை ஈஸ்வர முடையார்க்குத் திருநுந்தாவிளக்குப் புறமாகக் கொடுத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

Summary : This record is written in the 9th regnal year of Vikramachola devar. It refers to the sale of land measuring to 500 kuzhi for five Anradu Narkasu given by Thiraiyan Madevadigal Gangaikondan Rajadhirajavalavadaraiyan, by way of calling bidders to purchase the said land, by the residents of Perumukkil alias Gangaikonda Nallur. Rajadhiraja Valavadaraiyan had donated that land to Thiruvanmigai Isvaramudaiyar as Thirunundavilakkuppuram. (endowment for burning a perpetual lamp).

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவந சக்ரவத்திகள் ஸ்ரீ விக்ரமசோழ தேவற்கு யாண்டு க ஒன்பதாவது[1]

2 ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஓய்மானாடான விஜைய ராஜேந்த்ர வளநாட்

3 டு பெருமுக்கிலான கங்கை கொண்டானல்லூர் ஊரோம் எங்களூர் நீர் நிலத்தில் நடுவிற்

4 தூம்பினின்றுந் தெற்கு நோக்கிப்போன வாய்க்காலுக்கு மேற்குத் தடியிரண்டு நீக்கி

5 இதன் மேல்வரம்புக்கு மேற்கும் தென்பாற்கெல்லை ஏரிப்பட்டி வட வாய்க்கா

6 லுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை அத்திமேட்டு ரூ பெருவரம்பு (ர்)[க்]*கு கிழக்கும் வடபா[ற்]

7 கெல்லை அத்திச்செறு வடவரம்புக்கு தெற்கும் இந்நாற்பேரெல்லை யுள்ளும் உட்பட்ட நி

8 லம் பன்னீரடிக் கோலால் குழி ரூா ஐநூறும் விற்றுத்தரக் கொள்வீரில்லையோவெ

9 ன்று கூற இம்மொழிகேட்டு எதிர்மொழி குடுத்தோந் இம்மண்டலத்துச் செம்பூர்க் கோட்

10 டத்து புறையூர் நாட்டுச் செய்யூராந செயங்கொண்ட சோழ நல்லூர்த் திரையந் மாதெ

11 வடிகள் கங்கை கொண்டானான இராஜாதிராஜ வளவதரையநேன் நாநிறொ[1] நீங்க

12 ள் முற்சொல்லப்பட்ட நீர் நிலம் விற்றுத்தரக் கொண்டு பெருமுக்கிலாந கங்கை

13 கொண்ட நல்லூர்த் திருமலைமேல் திருவாந்மிகை ஈஸ்வரமுடையார்[க்]*கு திருநு

---

1. ஒன்பது என எழுத்தாலும் ஒன்று என எண்ணாலும் குறிக்கப்பட்டுள்ளது.

14 ந்தா விளக்குப் புறமாகக் கொண்டு விடுவேநாந் கொள்வன் முற்கூறிய பெருமுக்கி

15 லாந கங்கை கொண்டா நல்லூர் ஊரோம் எம்மில் இசைந்த விலைப் பொருள் அன்

16 றாடு நற்காசு ஐஞ்சு இக்காசு ஐஞ்சு ஆவணக் களியே கிழிகைச் செலக் கொண்டு பிற்கூறிய

17 திரையந் மாதேவடிகள் கங்கை கொண்டாநாந ராஜாதிராஜ வளவ தரையநுக்கு

18 விற்று விலையாவணஞ் செய்து குடுத்தோம் இந்நிலத்தால் வந்த இறைமுறை எப்

19 பே(ா)ற் பட்டது[ம்]* நாங்களே போக்கறுக்கக் கடவோமாகவும் இப்படி

20 ஸம்மதித்து விற்று விலையாவணஞ் செய்து குடுத்தோம். பெருமுக்கில்ாந கங்கை கொண்டா நல்லூர் ஊரோம் இந்நிலங் கைக்

21 கொண்டு இவ்விளக்கு செலுத்தக் கடவோமாநோம் இக்கோயிலில் திருவுண்ணாழிகை ஸபையோம் இப்படிக்கு ஊராற்காக ஊ. . . .

22 கை(ள)சிகந் சடகோபந் மலைகி[னி]*ய நிந்றாந் எழுத்து. இது பந்மாஹேஸ்வர ரக்ஷை!

---

2. நான் 'இதோ' என்பது 'இறோ' என்று மருவி வழங்கியிருப்பதாகக் கொள்ளலாம்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	3
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1121
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	40 / 1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	13
மன்னன் :	விக்கிரமசோழன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை மேற்குச் சுவர்.

குறிப்புரை : திருவான்மிகை ஈசுவரமுடையார் திருக்கற்றளி, திருமடைவிளாகம், திருநந்தனெங்கள், அகழிப் பாக்கமான விக்கிரம சோழ நல்லூர், காக்குநாயக விளாகம் ஆகியவற்றை இராஜாதிராஜ வளநாட்டுப் பொய்யிற் கூற்றத்தைச் சார்ந்த கோனூருடையான் அரையன் காக்கு நாயகனான கனகராயன் என்பானுக்காகப் பெய்த்தலைப் பெருமங்கலமுடையான் பெரியான் திருவன் ஆன சிறுத்தொண்டர் என்பான் செய்துமுடித்தான்.

Summary : This record is written in the 3rd year of Vikramachola deva. It seems to refer to the establishment of the temple, Thirumadaivilagam, temple gardens and villages known as Akalippakkam alias Vikramachola nallur and Kakkunayakavilagam by Udaiyan Periyan Tiruvan alias Siruththondan of Peithalai Perumangalam on behalf of Araiyan Kakkunayakan alias Kanakarayan of Konur a village in Poyyir Kurram a sub division of Rajadhirajavalanadu.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு மூ

2 ன்றாவது ராஜாதிராஜ வளநாட்டு பொய்யிற் கூற்

3 றத்து கோனூருடையான் அரையன் காக்கு நாயகனான கன

4 கராயன் செய்வித்த திருக்கற்றளியும் இத்தேவர் திருமடை வி
5 ளாகமும் திருநந்த(ன) வனங்களும் அகழிபாக்கமான விக்கிர
6 ம சோழ நல்லூரும் காக்கு நாயக விளாகமும் விடுவி
7 த்தான் கனகராயர்க்கு ஆக இத்திருக் கற்றளியும் தந்ம
8 ங்களும் செய்வித்தான் பெய்த்தலைப் பெருமங்க
9 லம் உடையான் பெரியாந் திருவன் ஆன சிறுத்தொ
10 ண்டர்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	14
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி. பி. 1132
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன்பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	14
அரசு :	சோழர்		
மன்னன் :	விக்கிரம சோழன்		

இடம் : *முக்யாசலேசுவரர் கோயில் கருவறை மேற்குக் குமுதம், ஜகதி.*

குறிப்புரை : *மாம்பாக்கிழான் நாராயணன் பொன்னம்பலக் கூத்தனான இராசேந்திர சோழ ஒய்மா நாட்டு மூவேந்தவேளான் என்பான் பெருமுக்கல் உடையார்க்குத் திருப்போனகத்திற்குத் திருமந்திரப் போனகப் புறமாக ஐநூறு குழி நிலம் தானமாக அளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.*

Summary : Begins with the historical introduction 'Poomadhu Punara Puvimadhu valara' of Chola king Vikramacholadeva, written in his 14th regnal year (1132 A.D.) It refers to the gift of land measuring to 500 kuzhi as Thirumandirapponagam by Mambakkilan Narayanan Ponnambala Kuthan alias Rajendra Chola Oyma Nattu Muvendha Velan to the God of Perumukkal.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்தி ஸ்ரீ** பூமாது புணரப் புவிமாது வளர ஙாமாது விளங்க ஜயமாது விரும்பத் த[ன்˙] இருபது மலர் மந்நவர்சூட மந்நிய மு. . .

2 செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யற ந்தழைப்பக் கலிங்கமெரியக் கடல்மலை நடாத்தி வளங்கொள். . .

3 வும் ஒருகுடை நிழற்றி விஜைய ஸிம்ஹாஸநத்து திரிபுவந முழுது(ம்) முடையா(ள்)ளொடும் வீற்றிருன்தருளிய கோப்பர கேசரி பந்ம. . .

4 ஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு ௰௪ ஓய்மா நாட்டு பெருமுக்க(ல்)
லான கங்கை கொண்டா நல்லூர். . . . .

5 முடையார்க்கு இவ்வூர் மாம்பாக்கழாந் நார[ா*] யணந் பொன்நம்பலக்
கூத்தநான இராசேந்தர சோ[ழ*] [ஓய்மா நாட்டு மூவேந்தவேள]

6 ஈன் இத்தேவர்க்கு சந்தியொன்றுக்கும் ௺ திருபோநகத்து சந்தி ௺க்கு
அரிசி ௪க்கு நெல்லு ௰௨க்கு என்காணி[யாந] இந்நிலத்[தி] ...

7 தெற்க்கடைய ௰௨க கோலால் குழி உ௱ரிய இதில் கிணறு செம்பாதீ
பெறுவதாகவும் நடுவிற் றூம்பு தெற்கு நோக்கி [ப்போனக]
ண்ணாற்றுக்கு மே

8 ற்க்கடைய வ[ா]ம வளவதரைவர் வடக்குப்பட்டிக்குக் கிழக்கும் மேற்கு
னோக்கிப்போன கண்மாய்க்கு வடக்கும் [தடிமூன்றுமாவின்] . . .

9 விளக்குப்பட்டிக்கு வடக்கடைந்த முக்கிக்குண்டிலும் ஆகக்குண்டில்
நாலினால் குழி உ௱௫௰ம் இருநூற்று ஐம்பதும் ஆகக் குழி ரு௱ ஐந்நூறும்
இத்தேவ

10 ற்கு திருமந்திரப் போனகப் புறமாக விட்டு இந்நிலத்தால் வந்த
சில்லிறை சோறுமாட்டு இறைமுறைமை எப்பேறப்பட்டதும் நானுமென்
வற்கத்தாருமே இ

11 றுப்பதாக சம்மதித்துவிட்டேன். மாம்பாக்கிழான் நாராயணன்
பொன்னம்பலக் கூத்தனான ராஜேந்த்ரசோழ ஓய்மானாட்டு மூவேந்த
வேளாநேன் இது. . . .

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	14
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1132
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	15
மன்னன் :	விக்கிரம சோழன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை மேற்கு முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை : விக்கிரம சோழனுடைய மெய்க்கீர்த்திப் பகுதி மட்டும் உள்ளது. கல்வெட்டின் பிற்பகுதி சிதைந்து விட்டது. பெருமுக்கலான கங்கை கொண்ட நல்லூரைச் சார்ந்த ஊரார் அளித்த நிலக்கொடை பற்றிக் கூறுவதாகத் தெரிகிறது.

Summary : Fragmentary inscription. A part of the Meikkirthi and the beginning portion of the text relating to an endowment are only available. This record appears to refer to the gift of land made by the residents of Perumukkil alias Gangaikonda Nallur. It is written in 14th regnal year (1132 A.D.) of Vikramacholadeva.

கல்வெட்டு :

1 ..ணர புவிமாது வளர நாமாது விளங்க செயமாது விரும்ப தந் நிரு பதுமல[ர்*] மன்னவர் சூட மன்னிய உரிமையில்

2 ... சூடி செங்கோல் சென்று திசாதொறும் வளர்ப்ப வெங்கிலி நீங்க மெய்யறந் தழைப்ப கலிங்கம் இரி

3 ..[கே]ால் நடாத்தி வலங்கொள்ளாழி வரையாழி திரிய இருசுடர (ர)ளவும் ஒருகுடை நிழற்ற செம்பொன் வீர சிங்காசந ...

4 ... புவ்ன முழுதுடையாளொடு வீற்றிருந்தருளிய திரிபுவநச் சக்கர வர்த்திகள் ஸ்ரீவி

5 க்கிரமசோழ தேவர்க்கு யாண்டு ௰௪ ஆவது பெருமுக்க(ல்)லான கங்கை கொண்டா நல்லூர் ஊ

6 ரோம் எங்க(ள்)ளூர் தெந் கழநியில் மடப்புறத்துக்கு கிழக்கு மன்திர போநகச் செறுவுக்கு தெ

7 ற்க்கு ஒன்றுக்கு மேற்கில் கரை .... ற்றுக்கு ....

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	சகம் [1435]
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1513
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	16
மன்னன் :	கிருஷ்ணதேவராயர்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை வடக்கு, மேற்கு, தெற்கு பத்மத்தின் கீழ் உள்ள கண்டப்பகுதி.

குறிப்புரை : ஏத்தப்ப நாயக்கர் குமாரர் திருமலை நாயக்கர் என்பார் இக்கோயில் நாயனார்க்குப் பூசைக்கும் திருப்பணிக்கும் திண்டிவனச் சீர்மையில் மூன்று கிராமங்களைத் திருநாமத்துக் காணியாக விட்டதைக் கூறுகிறது இக்கல்வெட்டு. கல்வெட்டு பெரிதும் சிதைந்துள்ளதால் மேலும் செய்திகளைத் தெரிந்து கொள்ள இயலவில்லை. கல்வெட்டின் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டாகும்.

Summary : Records the endowment of three villages in Tindivanachirmai as Thirunamathukkani for performing offerings and renovations to this temple by the Thirumalai Nayakar son of Etthappa Nayakar. This epigraph is dated in Saka year 1435 corresponding to 16th century A.D.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ மன் மகாமண்டலேசுர கண்ட கட்டாரி சாளுவ நர சிங்க ராயர் குமார[ர்] [கிரு]ஷ்ண ராயர் பிருதிவி ராச்சியம் பண்ணி யருளா நின்ற சகாத்தம் ௲௪௱௩௰௫ின் மேல் செல்லா நின்ற [பிரமோதூத] வருஷத்து-மிதுன நாயற்று பூசத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாட்டு கிடங்கில் பற்று பெருமுக்கல் திருமலை மேல்[உடையநாய]

2 னாற்கு சந்திரகிரி துற்காதிபதியான ஏத்தப்ப நாயக்கர் குமார திருமலை நாயக்கர் நம்முடைய பெரு .... னாற்கு பூசைக்கும் திருப் பணிக்கும் திண்டிவனம் சீர்மையில் கெ ... பாக்கம் காட்டுவான் பாக்கம் அருவாளப்பாக்கம் ஆக கிறாம மூன்றும் இன்நாயனாற்கு திருநாம[த்து]*க் காணியாக விட வேணும் என்று ராயர் கிருஷ்ண ராயர் ...... ண்ணிய ...

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	11
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1156
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்		
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	17
மன்னன் :	இரண்டாம் இராஜராஜன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : பெருமுக்கிலான கங்கை கொண்ட நல்லூர் ஊராரும் அதிலிருந்து வேறுபிரிந்த எதிரிலி சோழ நல்லூர் ஊராரும் திருமலை மேல்ஆளுடையார்க்குத் திருமந்திரப் போனகத்திற்கும், மடப் புறத்திற்குமாக இறைவிலைப் பிரமாணம் செய்து கொடுத்ததைக் கூறும் இக்கல்வெட்டில் நிலத்தின் எல்லைகள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. மெய்க் கீர்த்தியோடு தொடங்குகிறது.

Summary : It begins with the historical introduction of Rajaraja II written in 11th regnal year and records the endowment of Tirumandiraponagam and Madappuram (gift made for the maintenance of a mutt) of this village by the citizens of Perumukkil alias Gangaikonda nallur and Edirilicholanallur which was separated from the former village.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்தி ஸ்ரீ** மைக்கீர்த்தி முன்பாக பூமருவிய திருமா

2 தும் புவிமாதும் ஐயமாதும் நாமருவிய கலைமாது

3 ம் புகழ்மாதும் நயந்துபுல்க அருமறை நெ

4 றி யனைத்துலகுந் தழைப்ப வருமுறை உரிமையி

5 ல் மணிமுடி சூடித் திங்கள் வெண்குடைத் திசைக்களி

6 றெட்டுந் தங்கு தனிக் கூடந் தாநெென விளங்கக் கரு

7 ங்கலிப் பட்டிகை செங்கோல் துரப்ப பொருங்[க]* திரா

8 ழி புவி வளர்ந்துடன் வர வில்லவ ரிரட்டர் மீனவர் சிங்கள[ர்]

9 பல்லவர் . . . . பார்த்திவர் பணிய வெண்ணருங் கற்ப மண்ண

10 [கம் புணர்ந்து செ][1]ம் பொன் வீரசிம்ஹ[ர]* ஸனத்து த்ரிபுவன முழுதுடை

11 [யாளொடும் வீற்றி][2] ருந்தருளிய கோப்பரகேசரி [ப]*ந்மரான த்ரிபுவனச் சக்க[ர*]வ

12 [ர்த்திகள் ஸ்ரீராஜ][3] ராஜ தேவர்க்கு யாண்டு ௰௧ ஆவது

13 ஆவணி மாஸத்து இருபத் தொன்பதாந் தியதியும் ஸத்தமியும்

14 பெற்ற அனுழத்து நாள் ஜயங் கொண்ட சோழ மண்டலத்து ஓய்மாநா

15 டான விஜைய ராஜேந்த்ர வளநாட்டுப் பெருமுக்கிலான கங்கை கொண்டா ந

16 ல்லூரும் எதிரிலி சோழ நல்லூரும் ஊரோம் இவ்வூர் மாம்பாக்கிழான்

17 பெரியான் பொன்னம்பலக் கூத்தநான ராஜந்திரசோம[4] ஓய்மா நாட்டு

18 மூவேந்த வேளானும் மாம்பாக்கிழான் பெரியான் ஆடவலாநான பொ

19 ற்கோயில் சோழ மூவேந்தவேளானும் மாம்பாக்கிழான்(த்) தாழிகுன்ற

20 நான ஜயங்கொண்ட சோழ மூவேந்த வேளானும் மாம்பாக்கிழான் மாணி

21 மாதவன் நிறையாளனும் பொன்னுழான் நம்பி திருவெண்காடுடையானு

22 ம் உள்ளிட்ட ஊரோம் எங்களூரில் வேறு பிறிந்த எதிரிலி சோழ நல்லூர் உ

23 ளரோம் திருமலைமேல் ஆளுடைய நாயநார் திருவான்மிகை ஈஸ்வரமுடை

24 டயார்க்கு சண்டேஸ்வரப் பெருவிலையாக இறைவிலைப் பிரமாண[ம்]* பண்

25 ணிக் குடுத்த பரிசாவது எதிரிலி சோழ நல்லூர் நிலந்துக்கு[5] கீழ்பார்க் கெல்

26 லை வஞ்சிச் செறுவில் கீழ் வரம்பில் அடைவு கானுக்கும்[6] ஊர் நத்

27 தத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை

28 உமியூருடையான் குன்று வடபு

29 ரி வாய்மேற்கு நோக்கி இ

30 ளவளப் பாக்கத்து எல்லை

31 யிலே யுற வடக்கு மேல் பாற்

32 கெல்லை யிள வளப் பாக்கத் தெ

33 தல்லைக்கு கிழக்கும் வட

34 பாற்கெல்லை நகை நாணி பெருஞ் செறுவிற் தென்வா

35 திருச்சூலக் கல்லிலே உறத் தெற்கும் இநி

36 லத்தில் நீங்கல் ஆழ்வார் நிலம் வுட்பட்ப்பை தி

37 ருமலை மேல் ஆ[ளு]*டைய நாயனார் திருமந்திரப் போனகப்

38 [புற]ம் மடப்புறம் உள்ளிட்ட இறையிலிகள் நிலம் ஒன்றே முக்காலே

39 [எதி]ரிலி சோழ நல்லூர் நீர் நிலம் இருபத்துநாலே முக்காலே முக்.....

1, 2, 3 அடைப்புக் குறியுள் உள்ள எழுத்துக்கள் செதுக்கப்படாமல் இடம் விடப்பட்டிருக்கிறது. ‘புணர்ந்து’ என்பதில் உள்ள ‘ண்’ மட்டும் உள்ளது.

4 “ராஜேந்திர சோழ” என்றிருந்தல் வேண்டும்.

5 நிலத்துக்கு என்றிருத்தல் வேண்டும்.

6 காலுக்கும் என்றிருத்தல் வேண்டும்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	18
மன்னன் :	இரண்டாம் குலோத்துங்கன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை தெற்குச்சுவர்.

குறிப்புரை : பெருமுக்கிலான கங்கைகொண்ட நல்லூர் திருமலை மேல் ஆளுடையார் திருவான்மீஸ்வரர்க்கு முன்பு தேவதானம் இல்லை என்று இவ்விறைவனுக்கு வேண்டும் நிவந்தங்களுக்கு இறுப்பதற்காக ஆயிரக்கல நெல்லுக்கு இறையிலியாக எதிரிலி சோழ நல்லூர் என்று நிலத்தை வேறு பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று குலோத்துங்க ஸ்வண்ணாதிராஜர் சொல்ல அதன் படி நிலம் வேறு பிரிக்கப்பட்டதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. குலோத்துங்க சோழன் விக்கிரமசோழபுரத்துக் கோயிலில் அபிஷேக மண்டபத்து முத்துப் பந்தலின் கீழ் பள்ளிப்பீடத்தில் எழுந்தருளியிருந்து திருவாய்மொழிந்தருள அதன்படி இவ்வாணை வழங்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

Summary : This record is of Kulothunga chola deva. It states that when Kulothunga chola deva was seated on a Pallipida (seat) under Muthuppandar (pearl thatch) of Abhishekamandapam (Mandapa reserved for performing anointment), situated in the temple of Vikramacholapuram had made the endowment of a land which could yield thousand Kalam of paddy exmpting from paying taxes to the king.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர் விக்கிரமசோ

2 ழ புரத்துக் கோயிலில் அபிஷேக மண்டபத்து முத்துப் பந்தலின் கீழ்ப் பள்ளிப்பீ

3 டத்து எழுந்தருளி இருந்து திருவாய் மொழிந்தருளிந படி ஜயங்கொண்ட ே

4 சாழ மண்டலத்து ஒய்மா நாடாந விஜய ராஜேந்த்ர வளநாட்டுப் பெருமுக்கி

5 லாந கங்கைகொண்டா நல்லூர்த் திருமலை மேல் ஆளுடையார் திருவாந்

6 மிகை ஈஸ்வரமுடையாற்கு முந்பு தேவதாநமில்லை எந்று இதேவற்கு வே

7 ண்டும் நிமந்தங்களுக்கு இறுப்பதாக இவ்வூரிலே ஆயிரக் கல நெல்லுக்கு தேவ

8 ர் இட்டு இறையிலியாக இட்டு எதிரிலிசோழ நல்லூ(ர்) ரெந்று பேரால் வேறு பிறிக்க

9 க் குலோத்துங்க சோழ ஸ்வண்ணாதி ராஜர் நமக்குச் சொந்நமையில் ஒய்

10 மா நாடான விசய ராஜேந்த்ர வளநாட்டுப் பெருமுக்கிலாந கங்கை கொண்ட சோ

11 ழ நல்லூர் திருமலை மேல் ஆளுடையார் திருவாந்மிகை ஈஸ்வர முடையாற்கு

12 வேண்டும் நிமந்தங்களுக்கு இறுப்பதாக இவ்வூரில் விடும் இரு பூ விளையும் நி

13 லம் நாலே [இரு]மா முக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே நாலுமாக் காணி யரை

14 க்காணியும் ஒரு பூ விளையும் நிலம் பதிநாறே இரண்டு மாவிந் கீழ் மு

15 க்காலே ஒரு மாவாக நிலம் இருபதே எட்டு மா முக்காணி

16 அரைக்காணிக் கீழ் முக்காலே காணி யரைக் காணியி

17 நால் விரிசை* கொண்ட நிலம் இருபத்து நாலே முக்கா
18 லே முக்காணிக் கீழரையே நாலூமா முக்காணியிநா
19 ல் வேலி ஒந்றுக்கு நெல்லு முப்பத்தெண் கலமா
20 க நெல்லு தொளாயிரத்து நாற்பத்து . . . .

---

* வரிசை என்றிருத்தல் வேண்டும்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்	ஊர்க்கல்வெட்டு எண்	19
அரசு :	—		
மன்னன் :	—		

இடம் : *முக்யாசலேசுவரர் கோயிற் கருவறை தெற்குப்புறத் தேவகோட்டத் தூண்*

குறிப்புரை : *திருவான்மீஸ்வரமுடையார் கோயிலில் சிவத்தொண்டு புரிவதற்காகச் சைவ ஆசாரியன் ஒருவன் நியமிக்கப்பட்டுள்ளான். அவன் பெயர் ஆத்ரயன் திருச் சிற்றம்பலமுடையான் அன்பர்க்கரசு பட்டன் என்பதாகும். இக்கல்வெட்டு வாசகத்திற்குக் கீழே அவனுடைய உருவம் சிறிய அளவில் பொறிக்கப் பட்டுள்ளது. ஆலமர்ச் செல்வரின் தேவகோட்டத்தின் இருபுறத்திலும் உள்ள சிறிய தூண்களுள் ஒன்றில் இவ்வுருவமும் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. கோயில் கட்டப்பட்ட அதே காலத்தில் இச்சைவாசாரியனும் நியமிக்கப் பட்டுள்ளான் என்பது மற்றொரு தூணிலுள்ள கல்வெட்டால் அறியலாம்.*

Summary : A short inscription assignable to 12th century A.D. is engraved below the portrait which is carved on a pillar of the niche intended for Dakshinamurthy. This record mentions about Athrayan Tiruchirambalamudaiyan Anbarkkarasu Bhattan, a Saivacharya of this temple.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்தி ஸ்ரீ இக்**

2 **கோயிலில் சைவா**

3 சாரியன் ஆத்ர

4 யன் திரிச்சிற்ற

5 ம்பல முடை

6 யான் அன்பற்க

7 ரசு பட்டன் :-

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	20
அரசு :	—		
மன்னன் :	—		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை தெற்குப்புற தேவகோட்டத் தூண்

குறிப்புரை : ஆலமர்ச் செல்வர் தேவகோட்டத்தின் இரு புறங்களிலுமுள்ள இரண்டு தூண்களுள் ஒன்றில் இக்கல்வெட்டு காணப்படுகிறது. கல்வெட்டின் கீழ் உருவமும் செதுக்கப்பட்டுள்ளது. தென்கரை நாட்டுப் பெய்த்தலைப் பெருமங்கலமுடையான் பெரியான் திருவனான சிறுத்தொண்டர் என்று கல்வெட்டின் வாசகம் உள்ளது. இக்கோயிற் கருவறை மேற்குச் சுவரிலுள்ள கல்வெட்டு விக்கிரம சோழனின் மூன்றாவது ஆட்சியாண்டில் கோனூருடையான் அரையன் காக்கு நாயகனான கனகராயர் என்பான் திருக்கற்றளி, மடை விளாகம் திருநந்தவனம் ஆகியவற்றைச் செய்தான் என்றும் கனகராயர்க்காக அதனைச் செய்வித்தவன் பெய்த்தலைப் பெருமங்கலம் உடையான் பெரியான் திருவன் ஆன சிறுத்தொண்டர் என்றும் கூறுகிறது. எனவே இவ்விருவரும் ஒருவராக இருக்கலாம்.

Summary : Another short inscription. It is also engraved below a portrait found carved on a pillar of a niche intended for Dakshinamurthy. It mentions about Periyan Thiruvan alias Siruththondar of Peithalai perumangalam in Tenkarainadu. The individual mentioned in this inscription seems to be the same person who is stated to have established the temple, garden and some villages during the period of Vikramachola in inscription No 13.

கல்வெட்டு :

1 ஸ்ரீ தெந்கரை நா

2 ட்டு பெய்த்தலை

3 ப் பெருமங்கல

4 ம் உடையாந் பெ

5 ரியாந் திருவனா

6 [ன]சிறுத்தொண்டர்

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	10
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி. பி. 1128
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன்பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	21
அரசு :	சோழர்		
மன்னன் :	விக்கிரம சோழன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை தெற்குக் குமுதம்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. விக்கிரம சோழனுடைய மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு அவனுடைய பத்தாம் ஆட்சியாண்டைச் சார்ந்தது என்பது மட்டும் தெரியவருகிறது.

Summary : A fragmentary inscription. It seems to start with the historical introduction of Vikramachola mentioning the gift of land as Tirunanda-vilakkupatti.

கல்வெட்டு :

A 1 ல் நடாத்தி வ . . . . ஆழி திரிய இருசுடரளவு மொருகு

2 டை நிழற்றி . , ... வன முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோ

3 ப்பர(ாஜ)கெசரிபந்ம[ரான த்ரிபுவனசக்ரவர்]த்திகள் ஸ்ரீவிக்கிரம சோழ தேவற்கு யாண்

4 டு பத்தாவது ஐயங் . . . . து ஓய்மா னாடான விசைய ராஜேந்த்ர வள நாட்டுப் பெரு

5 முக்கிலாந கங்கை கொண்ட . . . . . த்தென் கழநியில் வேத வநப் பெருவதிக்கு தெற்கும் பிள்ளை

B 1 ..... நாற் பேரெல்லை உட்பட்ட ந ....

2 ..... ண்டினாற் குழி ஐஞ்ஞூறும் நீக்கித்தி

3 ... டியும் திருநந்தா விளக்குப் பட்டிகளு ..

4 .... ருமாவரையும் நீக்கின தி ....

5 .... காணிக் கீழுரையே நா ....

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	சகம் 1435
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1513
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	22
அரசு :	விஜயநகரர்		
மன்னன் :	கிருஷ்ணதேவராயர்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயிற் கருவறை கிழக்கு, தெற்கு முப்பட்டைக் குமுதம்

குறிப்புரை : ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஒய்மா நாட்டுக் கிடங்கில் பற்று பெருமுக்கல் நயினார் திருமலைமேல் ஆளுடைய தம்பிரானார் கோயில் மற்றும் பெரிய நாச்சியார் கோயில் திருமேனி காவலுக்குப் போலாச்சி நாயக்கர் மக்கள் திம்மையா தின்னையா ஆகியோருக்குப் பிரசாத பிராப்தியாக ஸ்ரீ பண்டாரத்தார் மான்யம் வழங்கியதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

Summery : It is written in Saka year 1435 corresponding to Pusa day of Mithuna Nayiru in the Tamil cyclic year Pramodhutha during the period of Krishnarayar. It records the gift of land to Thimmaiya Thinnaiyar for their watch and ward services of the temples of God and Goddess situated at Tirumalai.

கல்வெட்டு

1 **ஸ்வஸ்திஸ்ரீ மந்** மகாமண்டலேசுர கண்டகடாரி சாளுவ நரசிங்க ராயர் குமார வீர நரசிங்கராயர் குமார கிறுஷ்ணராயர் பிறுதிவி ராச்சியம் பண்

2 ணி அருளா நின்ற சகாத்தம் ௲சா௱௩௰௫-ல் மேல் செல்லா நின்ற காலத்து பிறமோதூத வருஷத்து மிதுன நாயற்று பூசத்து நாள் செயங்

3 கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா னாட்டு கிடங்கில் [பற்று] பெரு முக்கல் நயினார் திருமலைமேல் ஆளுடைய தம்பிரானார் கோயில் ஸ்ரீபண்டார

4 த்தார் சந்திரகிரி துற்காதிபதியான சுவாமி திருமலை நாயக்கர் திருப் படிக்கு போலாச்சி நாயக்கர் மக்கள் திம்மையா

5 தின்னையற்கு இன்னாயனார் திருக்கோயில் திருமேனி காவலுக்கு முன்னடந்த மதிகாரிக்கு திம்மையா தின்னையற்கு

6 திருமலை மேலுக்கும் பெரிய நாச்சியார் கோயில் திருமேனி காவலுக்கும் **ப்ரஸாத ப்ராப்தியும்** தென்னேரிக் கிராமம் நஞ்

7 சை புஞ்சை நாற்பாற் கெல்லையும் உள்பட . . . த்தையும் பெருமுக்கில் ஏரிகீழ் நஞ்சை நிலத்தில் பெருவதிக்கு வடக்கு

8 புதுப்புலத்துக்கு மேற்கு ஆடும் சொக்கர் விளாகமான [கு]குக பல் கு நாறு இதுவும் பழமுக்கில் ஏரி கீழ் நஞ்சை நிலத்

9 தில் தளை பல குஉா இதுவும் பெருமுக்கலில் கிளக்கு தெருவில் கீழ் சிறகில் திப்பியன் மனைக்கு வடக்கு குசவன் மனைக்கு தெற்கு

10 இம்மனைப் படப்பை வான் நீளமும் உள்பட . . . னையும் ஆக இந்த வகையில் உட்பட்ட தென்னேரிக் கிராமமும் துணி நில

11 வகையும் பெருமுக்கில் மனையும் **ப்ரஸாத ப்ராப்தியும்** பூறுவம் நடந்த இன்னாயனார் கோயில் ஸ்ரீபண்

12 டாரத்தாரோம் கல்வெட்டிக் குடுத்தோம் இம்மானிய வகை வி . . . ற்றிக் கிரையங்களுக்கு(ம்) முரித்தாய்த் திருமலை மேலாளு

13 டைய தம்பிரானார் உள்ள மட்டும் சந்திராதித்த வ்ரையும் பரம்பரை ஆக அனுபவித்துக் கொள்ள கடவராகவும் இந்தத் . . . .

---

* சகம் 1432-ல் தான் பிரமோதூத ஆண்டு வருகின்றது. எனவே இக்கல்வெட்டில் உள்ள ஆண்டினை 1432 என எடுத்துக் கொண்டால், மிதுன நாயற்றுப் பூசநாளுக்குச் சரியான ஆங்கில நாள் கி.பி. 1510 ஜுலை மாதம் 17-ஆம் தேதி ஆகும்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் ;	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12–ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	23
அரசு :	—		
மன்னன் :	—		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் தட்சிணாமூர்த்தி சன்னதி அருகில் விழுந்து கிடக்கும் கல்

குறிப்புரை : திருமலை மேல் திருவான்மிகைஈஸ்வரர் கோயிலுக்கு ஒருவன் நிலத்தானம் அளித்துள்ளான் என்பது தெரிய வருகிறது.

Summary : A mutilated inscription. It seems to record the gift of land by an individual to the temple of Tiruvanmisvaram.

கல்வெட்டு :

1 . . . நீரடிக் கோலால் குழி ஐஞ்ஞூறு இவ் வஞ்ஞூறும் . . .

2 . . . திர் மொழி குடுத்தோன் சோழ மண்டலத்து நித்த . . .

3 . . . ன்நாநிறொ இந்நிலங் கொண்டு இவ்வூர்த் திருமலைமே . . .

4 . . . ாகக் கொண்டு விடுவேன் முற்கூறிய கங்கை கொண்டா . . .

5 . . . நிலங் குடுத்து எம்மிலிசைந்த விலைப் பொருள் அன்றாடு . . .

6 . . . . ாம் இந்நிலத்தால் வந்த இறைமுறை எப்பேர்ப்பட்ட . . .

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 16-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	A.R. 42/1905
மொழி ;	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்		
அரசு :	—	ஊர்க்கல்வெட்டு எண்	24
மன்னன் :	—		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் கருவறை தெற்குப்பட்டி.

குறிப்புரை : பாடல் கல்வெட்டு. போலாச்சித் திம்மயப் போலயன் என்பவரைப் புகழ்ந்துரைப்பதாக உள்ளது. வாடாத மாலையை உடைய மார்பினன், தெக்ஷிண குல அதிபன், காமனுக்கு நிகரான காமயன், மாலவர் தம் மான குலத்தைச் சார்ந்தவன். திருமகள் வதியும் மார்பை உடைய அவன் முக்கிலை சேர்ந்தவன் என்று அமைகின்றது இப்பாடல்.*

Summary : An inscription written in poetic order, eologises Polachi Thimmaiyya Polaiyyan, describing him. as having worn unfaded garland, the chief of the southern dynasties, comparable to the handsome God Kaman having the chest wherein goddess Lakshmi is pleased to live and the resident of 'Mukkil'. This individual is also found mentioned in the inscription No. 22.

கல்வெட்டு :

1 தேமாலை மார்பினன் தெஷ்ண குலாதிபன் சீர்மருவும் காமர் தரு நிகற் காமயன் முந்

2 வந்த கார் வண்ண மாலவர் மாநகுலன் கெச சுத்த வாரணன் வண்மை முக்கில்

3 பூமாது வாழ் புயன் போலாச்சித் திம்மயபோலயனே

---

* இந்த போலாச்சி திம்மயனைப் பற்றிய குறிப்பு இவ்வூர்க் கல்வெட்டு எண் 22-ல் உள்ளது. இதில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசுபுரிந்த விஜயநகர மன்னன் குமார கிருஷ்ணராயர் காலத்தில் இப்போலாச்சி திம்மயன் வாழ்ந்தார் என்பது தெரியவருகின்றது.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	--	ஊர்க் கல்வெட்டு எண்	25
மன்னன் :	—		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்கு விநாயகர் தேவகோட்டத் திற்கு மேலுள்ள மகரதோரணப் பட்டி

குறிப்புரை : *கோயில் அர்த்தமண்டப தேவகோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் விசையாலைய விடங்கர் என்ற பெயரால் வழங்கப்பட்டது என்பது இக் கல்வெட்டால் அறியப்படுகிறது. கல்வெட்டு முற்றுப் பெறாமையினால் சிற்பத் தைச் செய்தளித்தவனின் பெயர் முழுமையாகத் தெரியவில்லை. ஆனால் 26-ஆம் எண் கல்வெட்டு வேளூர்க் கிழவன் விசையாலைய[ன் காக்]கு நாயகன் என்பான் மலை மேல் எழுந்தருளுவித்த பிள்ளையார்க்கு அமுதுபடிக்கு நிலம் கொடுத்த செய்தியைக் குறிக்கிறது. அவன் பெயர் விசையாலையந் [காக்]கு நாயகன் என்று வருவதாலும் தேவகோட்டப் பிள்ளையார் பெயரும் "விசையாலைய விடங்கர்" என்று இருப்பதாலும் விசையாலயன் காக்கு நாயகன் என்பான் தன் பெயரால் பிள்ளையாரை எழுந்தருளுவித்து அதற்கு அமுதுபடிக்கு நிலமும் அளித்துள்ளான் என்று கொள்ளலாம். ஆனால் தேவகோட்டத்தில் தற்போது பிள்ளையார் சிற்பம் இல்லை.*

Summary : A fragmentary inscription. Seems to mention the set up of a Pillaiyar known as 'Visaiyalaya Vidangar'. The name of this Pillaiyar leads us to infer that this could have been established by Visayalayan Kakku-nayakan who is found mentioned in the inscription No. 26 as the name of the Pillaiyar is after him.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ இப்பிள்ளையார் விசையாலைய விடங்கர் இப்பிள்ளையாரை எழுந் . . . . .

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	47
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1117
ஊர் :	பெருமுக்கல்		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	26
மன்னன் :	முதற் குலோத்துங்கள்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்கு, மேற்குச் சுவர்.

குறிப்புரை : *பெருமுக்கிலான கங்கைகொண்ட நல்லூர் ஊரார் சோழ மண்டலத்து வண்டாழை வேளூர்க் கூற்றத்து வேளூர்க் கிழவன் விசையாலையந் [காக்]கு நாயகனுக்கு நிலம் விற்றுக் கொடுத்து, நிலவிலையாவணஞ் செய்துள்ளனர். அந்த நிலத்தை வேளூர்க் கிழவன் தான் மலைமேல் எழுந்தருளிவித்த பிள்ளை யார்க்கு அமுதுபடிக்கு உடலாகச் சர்வ மான்யமாகக் கொடுத்த செய்தி இக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.*

Summary : This record is written in the 47th regnal year of Kulothunga Chola I. It refers to the endowment of land to the God Pillaiyar who was installed on the hill. This land was purchased by Vijayalayan Kakkunayakan the headman of Velur in Vandalai Velur Kurram, a sub-division of Chola Mandalam, from the residents of Perumukkil alias Gangaikonda Nallur.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** திரிபுவனச்

2 சக்கரவத்திகள் ஸ்ரீ கொலே[ா]

3 த்துங்க சோழ தேவர்க்கு ய[ா]

4 ண்டு நாற்பத்தேழாவது ஐ

5 யங் கொண்ட சோழ ம[ண்ட]

6 லத்து ஓய்மா நாடான விஜை[ய]

7 ராஜேந்த்ர வளநாட்டு பெருமு

8 க்கிலாந கங்கை கொண்டா நல்லு[ரர்]

9 ஊரோம் நிலவிலையாவண

10 ஞ் செய்து குடுத்த பரிசாவது

11 சோழமண்டலத்து வண்டா

12 ழை வேளூர்க் கூற்றத்து இவ்

13 வேளூர் கிழவந் விசையாலையந் [காக்]கு நாயகநுக்கு நாங்கள் விற்றுக் குடுத்த நிலமா

14 வது வேதவனப் பெருவதிக்கு தெ . . . . மாந பெருஞ் செறுவில் மேல் வரம்புக்கு மேற்

15 கு நீர் ஓடை மடுவும் அகப்பட . . திடலும் குழியும் விழலுமாய் அபோவனம[ா]

16 ய்க் கிடந்த நிலம் வடக்கடைய தென்கை வடகை கோல் பன்னிரண்டும் கீ[ழ்]*

17 கை மிகை கோல் பதின்மூன்றும் இதந் தெற்கு தென்கை வடகை கோல்

18 பதிெ[ந]ட்டும் கீழ்கை மிகைகோல் இருபதும் ஆக குழி ஐஞ்ஞூற்றொருபத்தாறு

19 ம் இவ்வேளூர் கிழவன் மலைமேல் எழுந்தருளிவித்த பிள்ளையார்க்கு அமுதுப்

20 படிக் குடலாக இவ்வூர்க் கடைத்தரத்து அபோவன நிலத்து ஊரோம் பக்

21 கல் கொண்டு திருத்தி சந்திராதித்த வரை இப்பிள்ளையார்க்கே **ஸ்வவம்** மா[ன்யமா*]வதாக* எம்மில்

22 இசைந்த விலைப்பொருளன்றாடு நற்காசறக் கொண்டு விற்று விலையாவணஞ்செய்து கு

23 டுத்து இந்நிலத்துக்கு . . . ராஜகேசரியால் இருகலநே தூணிப் பதக்கு நெல்லும் அரை

24 க்கால் காசும் இறுப்பதாகவும் இதுவல்லது மற்றெப் பேர்ப்பட்டிதுங் கொள்ளக் கட

25 வோமல்லாதோமாகவும் ஏரிநீர் கடைநீர் தலைநீர் பாயப் பெறுவதாகவும் ஸம்மதித்து விற்

26 று விலையாவணஞ் செய்து குடுத்தோம் இப்பெருமுக்கிலாந கங்கை கொண்டா நல்லூர் ஊ

27 ரோம் இது **பந்மாஹேஸ்வர ரக்ஷை**

---

* ஸர்வமான்யமாவதாக என்றிருத்தல் வேண்டும்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி. பி. 12-13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன்பதிப்பு :	—
அரசு :	—		
மன்னன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	27

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் மகாமண்டப மேற்குப் பட்டிகை, குமுதம், ஜகதி.

குறிப்புரை : பழமுக்கிலைச் சார்ந்த ஊரரார் திருவேங்கடச் செறு பன்னீரடிக் கோலால் அறுநூறும் விற்றுத்தரக் கொள்வீர் உளீரோ என்று கூறவும், இம்மொழி கேட்டு வெள்ளாளன் அயிறூருடையான் சீராமன் ஆட்கொண்டானான எடுத்தபாதப் பேரரையன் எதிர்மொழி கொடுத்துத் தம்முள் இசைந்து, பின் விலைப்பொருள் அன்றாடு நற்காசு மூன்றும் ஆவணக் களரியில் செலுத்தி நிலத்தைத் திருமந்திரப் போனகப் புறமாக விற்று விலையாணம் செய்து கொடுத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டின் தொடக்கம் கிடைக்கவில்லை.

Summary : The beginning of the inscription is not found. This record assignable to 12-13th century seems to refer to the transaction of land in auction between the residents of Palamukkil and Siraman Atkondan alias Eḍutha Pādapperaraiyan, a Vellala of Padur Kurrur as Tirumandhirap Ponakappuram (the endowment made for offering Thirumandirap Ponagam)

கல்வெட்டு :

1 கழனியில் தெற்கு னோக்கிப் போன வாளாடிகாலுக்குக் கிழக்கடைந்த திருவேங்கடஞ் செறுப்(பு)பன்னீரடிக் கோலாற் குழி அ

2 று னூறும் விற்றுத் தரக் கொள்வீருளீரோ வென்று கூற இம்மொழி கேட்டு எதிர்மொழி குடுத்தோன் சோழ மண்டலத்து னாங்

3 கூர் . . படூர் கூற்றூரிருக்கும் வெள்ளாளன் அயிறூருடையான் சீராமன் ஆட்கொண்டானான எடுத்தபாதப் பே

4 [ர]ரையநேன் னானிறொ நீங்கள் முற்கூறிய நிலங்கொண்டு திருமலை மேற் றிரு வால்மிகை யீச்சுவர முடையாற்கு

5 திருமந்திரப் போனகப் புறமாகக் கொண்டு விடுவநேன்ப் பழ முக்கிலூ ரோம் எடுத்தபாதப் பே[ர]*ரையனிடையில் ஈ

6 ம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசு மூந்று மாவணக் களியெ கிழிகைச் செலக் கொண்டு திருமந்திர

7 போநகப் புறமாக விற்று விலையாவணஞ் செய்து குடுத்தோம் பழ முக்கிலூரோம் இன்னிலத்தால் [கு]

8 [டு]த்த சில்லிறைதொறும் ஆட்டு இறை முறைமை எப்பேற் பட்டுதும் நாங்களே இறுப்பதாக விற்று

9 க் குடுத்தோம் பழமுக்கிலூரோம் இது **பந்மாஹேஸ்வர ரக்ஷை**

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	15
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1148
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	28
மன்னன் :	இரண்டாம் குலோத்துங்கன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் மகாமண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை . *இது ஏலமுறையில் விடப்பட்ட நிலவிலை ஆவணம். ஓய்மா நாட்டு இளவளப் பாக்கமான புரவரிநல்லூர் ஊரார் தங்களூர்க் கழனியில் காச்சுவான்பட்டி தடி இரண்டினால் குழி ஐநூறும் விற்றுத்தரக் கொள்வீர் உளீரோ என்று முற்கூற இம்மொழி கேட்டு நடுவில் நாட்டு ஆதிராஜ மங்கலபுரத்துப் பெருநிலக்கிழான் ஆதித்தன் பகவன் நான் கொள்வேன் என்று கூறவும், விலைப்பொருள் அறக் கொண்டு, நிலத்தால் வந்த சில்வரி, பெருவரி எப்பேர்ப்பட்டதும் இறுத்துக் கொள்வோம் என்று சம்மதித்து விற்றுக் கொடுத்தனர் மேற்கூறிய ஊரார். பெற்றுக் கொண்ட நிலம் ஒரு மாவினையும் திருமலைமேல் ஆளுடையார் திருவான்மீஸ்வரமுடையார்க்குத் திருநுந்தா விளக்கு சந்திராதித்தவரை எரிப்பதற்குக் கோயில் உண்ணாழிகைச் சபையார் வசம் அளித்த செய்தியினை இக் கல்வெட்டு தெரிவிக்கிறது.*

Summary : The record written in the 15th regnal year of Kulothunga Chola II mentions the transaction of land in auction between the residents of Ilavalappakkam alias Puravarinallur of Oymanadu and Adittan Pakavan the landlord of Adhirajamangalapuram in Naduvilnadu. The land was gifted to the God Thiruvanmisvaramudaiyar for burning a perpetual lamp as long as the moon and sun exist.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவநச் சக்ரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ப்திநஞ்சாவது ஒய்ம[ா]*நாட்டு இளவளப் பாக்கமாந புரவரிந

2 ல்லூர் ஊரோம் எங்களூரில் கீழ் கழ[நி]யில் காச்சுவாநபட்டி தடி இரண்டி நால் குழி ஐஞ்ஞூறும் விற்றுத் தரக் கொள்வீருளீரோ வெந்று முற்கூற

3 இம்மொழி கேட்டு எதிர்மொழி குடுத்தோந் நடுவில் நாட்டு ஆதிராஜ மங்கலபுரத்துப் பெருநல கிழாந் ஆதித்தந் பகவந் நாந் கொள்வேநெந

4 இவநுக்கு விற்று எம்மிலிசைந்த விலைப்பொருள் அறக்கொண்டு இந் நிலத்தால் வந்த சில்வரி பெருவரி எப்பேறபட்டுள்ளுதும் ந[ா]*ங்களே இறுத்துக் குடுக்க[க]

5 டவோமாகவும் ஸம்மதித்து விற்றுக்குடுத்தோம். இளவளப் பாக்கமாந புரவுவரிநல்லூர் ஊரோம் ஊர்க்குச் சமைந்து ஊர்க்கணக்கு சடகோபந் சக்கர

6 பாணி எழுத்து இந்நிலம் ஒருமாவும் திருமலைமேல் ஆளுடையார் திரு வாந் மிகையீஸ்வரமுடையார்குத் திருநுந்தா விளக்கு சந்திராதித்த வரை செ

7 லுத்தக் கடவோம். இக்கோயி(ல்)லில் திருவு[ண்*]ணாழிகை ஸபையோம் இதுபந்மாஹேசுரர்

8 ரக்ஷை

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	13
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1179
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	29
மன்னன் :	இரண்டாம் இராஜாதிராஜன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் மகாமண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : இரண்டாம் இராஜாதிராஜனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் செங்கேணி சீயன் பல்லவநான இராஜநாராயணச் சம்புவராயன் அந்தராயம், காத்திகைக் காசு உட்பட அனைத்துக் காசாயங்களையும் திருமலை மேல் திருவான்மீஸ்வரமுடையார்க்குக் கோயில் அமுதுபடிகளுக்கு உடலாக விட்ட செய்தி இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

Summary : The epigraph engraved in the thirteenth regnal year of Rajadhiraja Chola II, states the grant of taxes collected in cash such as Antharayam Karthikai Kasu etc. as capital to Thiruvanmisvaramudaiyar for meeting the expenses of offerings to the temple by Sengeni Siyan Pallavan alias Rajanarayana Sambuvarayan.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்தி ஸ்ரீ** திரிபுவநச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராஜாதிராஜ தேவற்கு யாண்டு பதின் மூன்றாவது மு

2 தல் பெருமுக்கில் திருமலை மேல் திருவால்மீஸ்வரமுடைய னாயநார்க்கு இவ்வூர் அந்தராயங் கா

3 த்திகைக் காசும்முள்ளபடி* கூலி காசும் வ[ை]கந்த காசு முட்பட்ட காசா யங்களெல்லாம் இந்நா

4 யநார்க்கு எதிரிகள் நாயகன் . . . . ப்பமுது மடக்குடலாக விட்டேன் செ

5 ங்கேணி சீயன் பல்லவநாந ராஜ நாராயணச் சம்புவராய நேன் இத்தந் மம் செங்

6 . . . . க்கு எதிரிகள் நாயகன் . . . . அமுதுபடிக்குடலாக விட் டேன் செ

7 ங்கேணி சீயன் பல்லவநாந ராஜ நாராயணச் சம்புதராயநேன் இத்தந் மம் செங்

8 கேணிகள் . . . த்தில் அழிவு செய்வவார் கெங்கை யிடைக் குமரியிடை செய்[த]பாவங் கொள்வார்.

* காசுமுள்படட - என்றிருத்தல் வேண்டும்

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	சகம் 1090
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1168
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	47/1905
மொழி :	சமஸ்கிருதம்	முன் பதிப்பு	—
எழுத்து :	கிரந்தம்		
அரசு :	—	ஊர்க் கல்வெட்டு எண்	30
மன்னன் :	—		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் முகமண்டபத் தெற்குப்பட்டிகை.

குறிப்புரை : ரிஷப வம்சத்தில் வந்த தலைவன் ஒருவன் மங்கலக்குடம் [கும்பம்] ஒன்றைத் தானமாகக் கொடுத்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. முக்யசைலம் என்று இவ்வூர் மலை குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டுகளில் சில சமயங்களில் ஆண்டை எண்ணாகவோ எழுத்தாகவோ குறிப்பிடாமல், சில எழுத்துகளைக் கொண்டோ, சொற்களைக் கொண்டோ தெரிவிக்கும் முறையும் பண்டைய நாளில் இருந்துள்ளதை அறிகிறோம். எழுத்துகளுக்கு எண் மதிப்பிட்டுக் குறிப்பதில் கடபயாதி, ஸித்தமாத்திரிகை என்று இரண்டு முறைகள் உண்டு. இம்முறைகளுள் கடபயாதி முறையில் இக்கல்வெட்டில் சக ஆண்டு குறிக்கப் பட்டுள்ளது என்பது சிறப்பாகும். அவ்வகையில் கிரந்த எழுத்துகளில் அமைந்துள்ள இச்சமஸ்கிருதக் கல்வெட்டில் நிதி நித்யா என்ற சொற்களின் எண் மதிப்பீடு 0901. இக்கணக்கீட்டு முறையில் இதனைத் திருப்பிப்படித்தல் வேண்டும். ஆதலால் 1090 என்றாகிறது. எனவே இக்கல்வெட்டின் காலம் சகாப்தம் 1090 (கி.பி. 1168) என்றறியப்படுகிறது.

Summary : This inscription is written in Grantha character dated in the Saka year 1090 corresponding to 1168 A.D. Sometimes the date of the inscription is not given either in numerical figures or in writing. But in some letters or words which have some numerical values. There are two

systems of numeral notation by letters known as the Katapayadi and the Siddhamatrika. In this inscription, the Katapayadi system is followed. Hence the Saka year 1090 is understood from this record. It refers to the gift of a ceremonial pot (Kumbha) to the temple situated at Mukya Sailam.

கல்வெட்டு :

ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தே நிதி நித்யா ஹே தேவோ வ்ருஷப வம்சஜ: தேவஸ்ய முக்ய சைலஸ்ய பேதமம் கும்பமர்ப்பயத்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	8
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1126
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	31
அரசு :	சோழர்		
மன்னன் :	விக்கிரமசோழன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் முன்மண்டபத் தெற்கு முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை : *இதுவுமொரு ஏலமுறை நில விற்பனையைக் கூறும் கல்வெட்டு. ஒய்மாநாடான விஜயராஜேந்திர வளநாட்டு நுளம்பூர் ஊரார் தங்களூரில் ஏரி உடைந்து காடுகோளாய்க் கிடக்கும் நிலத்தை விலையிட்டுக் கொண்டு, திருத்திக் கொள்வீர்கள் உளீரோ என்று கூற, இம்மொழி கேட்டுச் சோழ மண்டலத்து நித்த விநோத வளநாட்டு அரைசூர் உடையான் உய்ய வந்தான் அழகிய தேவன் என்பான் அந்நிலங் கொண்டு அதனைத் திருவான்மிகையீஸ்வரருக்குத் திருப்படி மாற்றுக்கு உடலாக விட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. நிலத்திற்கு எல்லைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. கல்வெட்டின் இறுதிப்பகுதி கிடைக்கவில்லை.*

Summary : This inscription states that the Urar (the villagers) of Nulambur in Vijayarajendra Valanadu alias Oymanadu sold the lands which fell shallow covered by sanddunes and jungles due to the] collapse of the lake bunds, by auction for reclamation and cultivation. A certain Uyyavandan Alagiya Devan of Nittavinoda Valanadu in Cholamandalam purchased the lands and gifted them to the God Tiruvanmigai-isvaramudaiyar on the sacred hill (Tirumalai) at Perumukkil for offerings etc., The last portion is damaged. The boundaries of the lands are given.

கல்வெட்டு :

1. **ஸ்வஸ்தி ஸ்ரீ** விக்கிரமசோழதேவற்கு யாண்டு அ வது ஒய்மா நாடாந விஜைய ராஜேந்த்ர வளநாட்டு நுளம்பூர் ஊரோம் எங்களூரில் ஏரிகீழ்ப் படு ஏரி உடைந்து மண்ணிட்டு காடு

2. கோளாய் கிடந்தமையில் இன்நிலம் விலையிட்டுக் கொண்டு திருத்திக் கொள்வீ[ர்]*க[ள்]* உளீரோ வென்று கூற இம்மொழி கேட்டு [எதிர்] மொழி குடுத்தோந் சோழ மண்டலத்து

3. நித்தவிநோத வளநாட்டு அரைசூர் உடையான் உ[ய்]*ய வந்தான் அழகியதேவநேன் நாந்நிறொ இன்நிலங் கொண்டு பெரும்முக்கில் திருமலை மேல் தி[ருவா]ந் மிகையீ**ஸ்வர** முடைய . . . த்துக் கட்

4. டில் எழுந்தருளியிருந்தால் திருப்படி மாற்றுக்கு உடலாக இன்நிலங் கொண்டு விடுவநேந்(ந) முக்கூறிய நுளம்பூர் ஊரோம் ஏரிகரை வா[ய்க்]கால் நீளத்துக்கு வடக்கும் மேல்பாற்க்கெல்லை . . . .

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	45
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1115
ஊர் :	பெருமுக்கல்		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	32
மன்னன் :	முதலாம் குலோத்துங்கன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் முன் மண்டபத் தெற்குச்சுவர்.

குறிப்புரை : முதற்குலோத்துங்க சோழனின் 45-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு. சோழ மண்டலத்து இராஜராஜ வளநாடான பொய்யிற் கூற்றத்துக் கோனூர் கோனூருடையான் அரையன் காக்கு நாயகன் ஆன கனகராயன் அன்றாடு நற்காசு இட்டுப் பெற்ற நிலத்தைத் திருவான்மிகை ஈஸ்வரமுடையார்க்கு அளித்த செய்தி காணப்படுகிறது. நிலத்திற்கு எல்லைகள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு பழங்கல்வெட்டுப் படியாக இருந்திருத்தல் வேண்டும். ஏனெனில் இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் கோனூருடையான் அரையன் காக்குநாயகன் ஆன கனகராயன் விக்கிரமசோழனின் மூன்றாவது ஆட்சியாண்டில் இத்திருமலைமேல் திருவான்மிகைஈஸ்வரமுடையார் கோயிலைத் திருக்கற்றளியாக்கியுள்ளான். எனவே தந்தையின் காலத்தே தனிக்கல்லில் வெட்டியிருந்த கல்வெட்டினைத் திருப்பணிக்குப் பின்னர் மகாமண்டபத்தில் பொறித்திருத்தல் வேண்டும்.

Summary : Rajakesarivarman Kulothunga Chola I year 45 (in numeral and also in words) dated 1114-15 A.D. Begins with the king's Tamil prasasti pugalmadhu vilanga etc. States that a certain Kanakarayar alias Araiyan Kakkunayakan chieftain of Konur situated in Poyyir Kurram in Raja Raja Valanadu purchased 4050 kuli of lands for six Kasu and gifted them to the God Tiruvanmigai-isvaramudaiya Mahadevar on the sacred hill. The village Perumukkil is also called Gangai-

kondanallur in the surname of Rajendra Chola I the maternal grand father of Kulothunga. The chieftain who figures in this record also figures in the 3rd year record of Vikrama chola son of Kulothunga and it is said that he built the (central) shrine of stone. Probably in the time of Kulothunga the central shrine was in brick structure. Incidently the records of Kulothunga, as we shall see below are found on the walls of the mandapa. The provenance of the records supports our surmise.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ புகழ்மாது விள[ங்]*க ஜயமாது விரும்ப நில(க)மகள் நிலவ மலர்மகள் பு

2. ணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி மீநவர் னிலை கெட வில்லவர் குலை

3. தர ஏனை மன்நவர் இரியலுற்றிழிதரத் திக் கனைத்திலுந் தன் சக்கர ணடாத்தி வி

4. ஜயாபிஷேகம் பண்ணியருளி வீர ஸிங்ஹாஸநத்து உலகுடை யாளொடும் வீற்றிருந் தருளிய கோ

5. வி ராஜகேஸரி பந்மராந த்ரிபுவந சக்ரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவ[ர்]*க்கு யாண்டு சல்டு ஆவது

6. நாற்பத்தைஞ்(ச்)சாவது ஜய[ங்]*கொண்ட சோழ மண்டலத்து ஓர்மா நாடாந விஜைய ராஜேந்த்ர வளநாட்டுப்

7. பெருமுக்கிலாந கங்கைகொண்டா நல்லூர் மலைமேல்த் தி[ரு]*வாந் மிகையீஸ்வரமுடைய மஹாதேவர்[க்கு]

8. சோழ மண்டலத்து இராஜஇராஜ வளநாடாந பொயிற் கூற்றத்து கோனூர்க் கோனூர் உடையாந் அரையந் காக்கு

9. நாயகந் ஆந கனகராயந் இவ்யூரார் பக்கல் அன்றாடு நற்காசு ஆறும் இட்டுக் கொண்டு விட்ட நிலமாவது இத்திரு[ம]

10. லைக்கு மேற்க்கு வடுகன் பட்ட கல்லின் வடவாசறுதியிநின்றும் மலை அடியே தெற்க்கு நோக்கிப் பிடாரன் கேணி தென்கரையி

11. ல் படர் பாறையிலே உற பன்னீர் அடிக்கோலால் கோல் தொண் ணூறும் கீழ்பாற்கெல்லை ஆவதாகவும் இப்பாறையிநின்றும் மேற்க்

12. கு நோக்கி கோல் நா[ற்]*பத்தைஞ்(ச்)சும் தென்பாற்கெல்லை ஆவதாக வும் இதநின்றும் வடக்கு நோக்கி கோல் அறுபதும் மேல் பாற்கெல்லை

13. ஆவதாகவும் இதநின்றும் கிழக்கு நோக்கி வடுகந் பட்ட கல்லின் வட வாசறுதி உறகோல் நாற்பத்தைஞ்(ச்)சும் வட பாற்கெல்லை ஆ

14. வதாகவும் இன்நாற்(ப்)பா எல்லை உள் நின்ற கல் நி[லை]உள்படக் குழி நாலாயிரத்தைம்பதும் இன் நிலத்துக்கு தெற்கு பிடாரன்

15. கேணி தென்கரைப் படர் பாறையி நின்றும் தெற்க்கு நோக்கி கோல் ஐம்பதும் கீழ்பாற்க்கெல்லை ஆவதாகவும் இதநின்று மே

16. [ற்]க்கு நோக்கி கோல் ஐம்பது தென்பாற்க் கெல்லை ஆவதாகவும் இதநின்று வடக்கு விழால் மலைக்குன்றிலேய் உறக்கோல்

17. ஐம்பது மேற்பாக்கெல்லை ஆவதாகவும் இதநின்று கிழக்கு நோக்கி கோல் ஐம்பதும் வடபாற்கெல்லை ஆவ்தாக

18. [வும்] இன் நால் பால் எல்லை உள்நின்ற [க]ல் நிலை உ....

த. நா. தொ. ஆய்வுத்துறை | தொடர் எண் : 101 / 1992

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	[16]
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1162
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	33
மன்னன் :	இரண்டாம் இராஜராஜன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் முன்மண்டபத் தெற்குச்சுவர்.

குறிப்புரை : இரண்டாம் இராஜராஜனின் மெய்க்கீர்த்திப் பகுதியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு ஆங்காங்கே சிதைந்துள்ளது. இம்மன்னன் காலத்தில் சிற்றரசனாக ஆட்சிபுரிந்த செங்கேணி சீயன் பல்லவனான இராஜநாராயண சம்புவராயன் திருவான்மிகை ஈஸ்வரமுடையார்க்கு அமுதுபடிக்கு நஞ்சை புஞ்சை உள்ளிட்டவைகளுக்கான பாடிகாவல் என்ற வரியினைத் தானமளித்துள்ள செய்தி இக்கல்வெட்டால் அறியப்படுகிறது.

Summary : Raja Raja Chola II year (16) dated 1161-62 A.D. Begins with the King's Tamil Prasasti pumaruviya tirumadum etc. States that the chieftain Sengeni Siyan Pallavan alias Raja Narayana Sambuvarayan gifted siru padi kaval tax of some wet and dry (cash crop) lands for food offerings to the God Tiruvanmigai-isvaramudaiyar on the sacred hill at Perumukkil alias Edirili Solanallur also called Gangaikonda Nallur. Edirili Sola was the surname of Kulothunga II father of Raja Raja II

கல்வெட்டு

1. **ஸ்வஸ்தி ஸ்ரீ** பூ
2. மருவிய திருமா

3. தும் புவிமாதும்

4. ஜயமாதும் நா

5. மருவிய கலைமா

6. தும் புகழ்மா

7. தும் நயந்து புல்க அ

8. ருமறை நெறியனை

9. த்துலகுந் தழைப்ப

10. வருமுறை உரிமையி

11. ல் மணிமுடி சூடி திங்

12. கள் வெண்குடை திசை

13. க்களிறெட்டுந் தங்கு

14. தனிக் கூடந் தாநெ

15. ன விளங்க கருங்க

16. லிபடமிசை செங்

17. கோல் துரப்ப பொ

18. ருங் கதிராழி புவிவள

19. ந்துடன்

20. வர வில்ல

21. வரி ரட்டர்

22. மீனவர் சி

23. ங்கணர் . . . .

24. . . . . த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு [௰௬]வது ஜயங்கொண்ட [சோழ மண்டலத்]

25. து ஒய்மா நாடான விஜைய ரா[ஜே]ஜந்த்ர வளநாட்டு பெருமுக்கிலான எதிரிலி சோ[ழ நல்லூர்]

26. திருமலைமேல்(ா) ஆளுடைய நாயநார் திருவாந்மிகை ஈஸ்வரமுடையார்க்கு செங்கேணி சீயன் பல்லவநான ராஜ[நாராயண சம்புவராயனேன் பெரு]

27. முக்கலான கங்கைகொண்டா நல்லூர் சிறுபாடி காவல் நஞ்சை புஞ்சை உள்ளிட்டன இத்தேவர்க்கு அமுதுபடிக்கும் [செங்கேணி சீயன் பல்ல]

28. வநாந ராஜநாராயண சம்புவராயநேன் இத்தந்மம் அழிவு செய்வார் கெங்கை இடைகுமரி யிடைச் செ[ய்]*தார் . . . . . .

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	7
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1153
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	34
மன்னன் :	இரண்டாம் இராஜராஜன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் மகாமண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : இரண்டாம் இராஜராஜனுடைய மெய்க்கீர்த்திப் பகுதியுடன் தொடங்குகிறது. திருமலைமேல் ஆளுடையார் திருவான்மிகைஈஸ்வரமுடையார்க்குச் செய்யூர் நாட்டுச் செய்யூரான ஜயங்கொண்ட சோழ நல்லூரைச் சேர்ந்த இலக்கிச்சாள் மகள் திருநுந்தா விளக்கு எரிப்பதற்காக முப்பத்திரண்டு பசுக்களைத் தானமாக அளித்துள்ளமை இக்கல்வெட்டால் அறியப்படுகிறது. மேலும் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்ட இவ்வூரின் ஒரு பகுதியான எதிரிலிசோழநல்லூர் இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Summary : Parakesarivarman Raja Raja Chola II year 7; month Panguni pir pattu(?) [mistake for mur-pattu] Sw 10 star Ayilyam and Saturday which regularly correspond to Saturday the 14th March 1153 A.D. Quoted star was current after midnight. Begins with the king's Tamil Prasasti Pumaruviya tirumadum etc. States that the daughter of Elakkichal of Jayangonda Solanallur alias Cheyyur of Cheyyurnadu situated in ......ttathupuraiyur nadu of this mandalam (evidently Jayangonda Sholamandalam) gifted one perpetual lamp and thirty two cows to the God Tiruvanmigai-isvaramudaiyar on the sacred hill, in Perumukkil alias Edirili Solanallur. The temple authorities received the gifts and agreed to burn the lamp so long the sun and moon endure.

கல்வெட்டு :

1. **ஸ்வஸ்தி ஸ்ரீ** பூமருவிய திருமாதும் புவிமாதுந் ஜயமாதும் நாமருவிய
2. புகழ்மாதும் நயந்து புல்க அருமறை நெறியனைத்துலகுந் தழைப்ப வருமு[றை]
3. மணிமுடி சூடி திங்கள் வெண்குடைத் திசைக் களிறெட்டும் தங்கு தநிக் கூட ந்தாெ . .
4. ங்கலிபட மிசைச் செங்கோல் துரப்ப பொருகதிராழி புவி வளர்த்துடந் வர வில்லவரி ரட்ட . . . .
5. பல்லவர் வாங்கலியர் பாத்திவர் பணிய எண்ணருங் கற்பு மண்ணகம் விளங்க செம்பொந் வீ
6. [ரஸிம் ஹாஸனத்]து உலகுடை முக்கோக்கிழாநடிகளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேஸரி **பந்மரான** திரி
7. [புவனச் சக்கரவர்த்திகள்] ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு ஏழாவது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாடாந
8. [விஜய ராஜேந்த்ர வளநாட்டு] பெருமுக்கிலாந எதிரிலி சோழநல்லூர் திருமலைமேலாளுடையார் திருவா[ன்]*மிகை**ஈஸ்வர**முடையார்க்கு இம்ம
9. . . . . . ட்டத்துப்புறையூர் நாட்டு செய்யூர் நாட்டுச் செய்யூராந ஜயங்கொண்ட சோழ நல்லூர் இ[ல]க்கிச்சாள் மகள்
10. பைங்குநி மாஸத்து பிற்பத்தில் ஆயிலையமும் பெற்ற சநிக் கிழ[மை]* நாள் இதேவற்கு வைத்த **திருநந்தா** விளக்கு
11. [ஒன்றுக்கு விட்ட பசு முப்ப]த்திரண்டு இப்பசு முப்பத்திரண்டும் கைக்கொண்டு இத்**திருநந்தா** விளக்கு சந்திராதி[த்]*தவரை செலுத்தக் கடவோம் இ .
12. . . . . . . [வுண்ணா]ழிகை **ஸபையோம்** இது **பந்மாஹேஸ்வர ரக்ஷை**

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	5
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி ;	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க்கல்வெட்டு எண்	35
மன்னன் :	—		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் மகாமண்டபத் தெற்குச் சுவர்

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. சோழமன்னன் ஒருவனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் பொன்னனான விக்கிரம சோழ மூவேந்தவேளான் என்பான் அர்த்தசாமம் வரை எரிவதாகக் குன்றில் இட்ட விளக்கு ஒன்று என்பதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

Summary : The letters are in the character of 12th century-very much damaged-engraved in the 5th year of some chola king refers to the gift of a lamp to be burnt in the night before the God on the sacred hill by a certain Ponnan alias Vikrama Sola Muvenda Velan of K..davayil ......

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவனச் சக்கர . . . . . .
2. யாண்டு ஙிவது உடையார் திருமலை மேல் ஆளுடைய நாயநாற்கு கடவாயிலுடைய . . . .
3. பொன்னநான விக்கிரம சோழ மூவேந்த வேளான் இன் நாயநாற்குத் திருமலை . . . . .
4. வத்தசாமம் அறுதியாக எரிவதாக வைத்த குன்றத்திட்ட விளக்கு ஒன்றுக்கு விட்ட .

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	39
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி. பி. 1109
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன்பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்		
அரசு :	சோழர்		
மன்னன் :	முதலாம் குலோத்துங்கன்	ஊர்க் கல்வெட்டு எண்	36

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் மகாமண்டபத் தெற்குச்சுவர்.

குறிப்புரை : *இது ஒரு பழங்கல்வெட்டுப் படியாகும். முதற்குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியோடு துவங்கும் இக்கல்வெட்டு அவனுடைய **39-ஆவது ஆட்சியாண்டில்** மாம்பாக்கிழான் மாதவன் என்பான் **திருமலைமேல் ஆளுடையார்க்குத் திரு**நுந்தா விளக்கொன்றினுக்காகச் சாவா மூவாப் பேராடு வைத்ததைத் தெரிவிக்கிறது.*

Summary : States that this is a later copy of an old record of Rajakesarivarman Kulottunga Chola I year 39 dated 1108-09 A.D. Begins with the king's Tamil Prasasti pugalmadu vilanga etc. Registers the gift of a perpetual lamp and sheep by a certain Madavan the headman of Mambakkam (Mambakkilan) to the God on the sacred hill. The priests received the gifts and agreed to burn the lamp daily so long the sun and moon endure.

கல்வெட்டு :

1. **ஸ்வஸ்தி ஸ்ரீ** கல்வெட்டி படி புகழ்மாது விளங்கச் சயமாது விரும்ப நிலமகள் நில[வ உரி]
2. மையிற் சிறந்த மணிமுடி சூடி மீநவர் நிலை கெட வில்லவர் குலைதர ஏனை[மன்னவர் இரியலுற்றிழிதர]

3. த் திக்கனைத்திலுந்தந் சக்கர நடாத்தி விசைய அபிஷேகம் பண்ணி வீரஸிம்ஹாஸ . . . .

4. யாளொடும் வீற்றிருந்தருளிய கோவி ராஜகேசரி பம்மராந திரிபுவந சக்ரவத்[திகள் ஸ்ரீ]

5. குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு முப்பத்தொன்பதாவது பெரு முக்கில் . . . .

6. ர் மாம்பாக்கிழான்(ன்) மாதவநேன் இவ்வூர்த் திருமலை மேல் ஆளு டையார் திரு . . .

7. யார்க்கு நான் வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு விட்ட சாவா மூவாப்பேராடு . . . .

8. கைக்கொண்டு இவ் விளக்கொன்றுஞ் சந்திராதித்த வரை செலுத்தக் கடவோமாநே . . .

9. ண்ணாழிகை ஸபையோம் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-ஆம் நூற்.
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	37
மன்னன் :	இரண்டாம் குலோத்துங்கன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் மகாமண்டபத் தெற்கு, கிழக்குப் பட்டிகை

குறிப்புரை : கல்வெட்டின் பகுதிகள் சுவரில் மறைந்துள்ளன. எனவே முழுமையும் கிடைக்க வில்லை. இரண்டாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்திப் பகுதியோடு தொடங்கும் இக்கல்வெட்டில் முன்னூற்று குடிப்பள்ளி செங்கேணி நாலாயிர வன் அம்மையப்பனான சம்புவராயன் திருமலைமேல் திருவான்மிகைஈஸ்வர முடையார்க்குத் திருவிழாப்படிகளுக்கு உடலாகச் சிறுபாடிகாவல் நெல் மற்றும் பெரும்பாடி காவல் ஆகிய அனைத்து வருவாய்களையும் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

Summary : Part of the inscription is covered by an intermitant wall-Kulottunga Chola II (of accession 1133) year lost-Begins with the king's Tamil prasasti pumevivalar etc. Built in-States that Munnurru Kudippalli Senkeni Nalayiravan Ammaiyappan alias Sambuvarayar donated the paddy income from siru padi kaval and perum padi kaval tax to the God Thiruvanmigai isvaramudaiyar on the sacred hill for conducting festivals. (Sambuvaraya chieftains flourished in the reigns of the Chola kings of the 12th and 13th centuries. For further details please see A.R.I.Ep. 1919part II para 21).

கல்வெட்டு :

1. **ஸ்வஸ்தி ஸ்ரீ** பூமேவி வளர் திருப்பொன் மாது வளர நாமேவு கலைமகள் நலஞ் சிறந்திருப்ப விஜய மாமகள் வெல்புயத்திருப்ப இசைவும் செல்வமு மெண்டி . . . .
மடந்தையைத் திருமணம் புணர்ந்து சீர்தரு மணிமுடி கவிச்ச நன்மணி முடி சூடி மல்லை ஞாலத்து பல்லுயிர்க் கெல்லா மெல்லை யிலின்ப மியல்வினி லெய்தி வாழி பல்லூழி ஆழி நடப்ப செம்பொன் வீர ஸிம்ஹாஸநத்துப . . . . திகள் ஸ்ரீகு . . . .

2. ஓய்மா நாடான விஜைய ராஜேந்த்ர வளநாட்டு முந்நூற்று குடிப்பள்ளி செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பனான சம்புவராயனேன் பெருமு . . . . திருமலைமேற் திருவாந்மிகை ஈஸ்வர முடையார்க்கு இவ்வூர் சிறுபாடி காவல் நெல்லும் பெரும்பாடி காவ லெ[ப்]பே(ர்)பட்டிதும் இத்தேவர்க்குத் திருவிழாப் படிக்கு உடலாவதாக இத்தந்மம் . . . . ச்செய்து

3. . . . . [ே]பாமாநோம் இக்கோயிலில் திருவுண்ணாழிகையோம்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	14
வட்டம் ;	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1132
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	38
மன்னன் :	விக்கிரம சோழன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் மகாமண்டபத் தெற்குக் குமுதம்

குறிப்புரை : இக்கல்வெட்டு முழுமையாக இல்லை. இக்கல்வெட்டின் ஆறாவது வரி வேறொரு கல்வெட்டுடையதாக இருக்கலாம் எழுத்தமைதியும். பொருளும் வேறுபடுகிறது. ஓய்மா நாட்டைச் சார்ந்த செம்பேடான பாகண்ட பயிரவ நல்லூர் நிலத்தை ஏல முறையில் விற்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

Summary : The inscription is not in full form - seems to be fragments of two inscriptions - lines 1 to 5 and line 6 differ in character - Part I belongs to Vikrama Chola Year 14, dated 1132 A.D. Begins with the king's Tamil Prasasti pumadu punara etc., Refers to the sale of land (to the temple?) in Sembodu alias Bakanda Bairavanallur. Line 6 mentions Rajendra Chola Velaikaras (body guards.)

கல்வெட்டு :

I

1. ஸ்வஸ்தி ஸ்ரீ பூமாது புணர புவிமாது வளர நாமாது விளங்க செயமாது விரும்ப தந்திரு பதுமலர் மன்னவர் சூட மந்நிழ உரிமையில் மணிமு . . . . . .

2. . . . ய கடல்மடை நடாத்தி வலங்கொள்ளாழி வரையாழி திரிய இரி சுடர்ளவும் ஒரு குடை நிழற்றி செம்பொந் வீர சிங்காச . . .

3. . . . . சோழ தேவர்க்கு யாண்டு ௰௪ . . . .

4. செ[யங்]கொண்ட சொழ மண்டலத்து ஒய்மா நாட்டு சேம்பெடாந பாகண்ட பயிரவ நல்லூர் . . .

5. பக்கல் தாழஞ்செய்க்குழி கூாள தெக்கில் கிணறும் விற்றுத் தரக் கொள்வீ(ர்)ருளிரோ வெந்று கூற இம்மொழி கேட்டு எதிர்மொழி குடு . . .

II

1. இளவளப் பாக்கத்திருக்கும் இராசேந்திர சோழநுதாய வேளைக் காறரும் வீர(ர) இராசேந்திர தெரிந்த வில்லிகளும் தங்க[ளி]ல் வழக் காடுகிறடத்து நாந் யெகிற அ[ம்] . . . .

த. நா. தொ. ஆய்வுத்துறை — தொடர் எண் : 107 / 1992

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	5
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-13ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி ;	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்	ஊர்க்கல்வெட்டு எண்	39
அரசு :	சோழர்		
மன்னன் :	—		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்குப்பட்டி

குறிப்புரை : துண்டுக்கல்வெட்டு. பகுதிகள் யாவும் மிகவும் இடம்மாற்றி வைத்துக் கட்டப் பட்டுள்ளன.

Summary : Fragment-Seems to be a grant by Senkeni Nalayiravan Ammaiappan alias Sambu (varayan).

கல்வெட்டு :

1. . . வனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜ கேசரி பன்மராந திரிபுவனச் சக்ர . . . . . லோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ௫ஙு வது

2. நானும் என் வற்கத்திலுள்ளாரும் அழிவு செய்யக் கடவோ மல்லாதோ . . . . . . குடுத்தேந் செங்கேணி நாலாயிரவநம்மை யப்பனான சம்புவ.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	8
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1126
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	40
மன்னன் :	விக்கிரமசோழன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் அர்த்தமண்டபக் கிழக்குக் குமுதம்

குறிப்புரை : இரண்டு துண்டுகளாக இருக்கும் கல்வெட்டுகள் சேர்த்துப் படிக்கப்பட்டுள்ளன. பிறபகுதிகள் கிடைக்கவில்லை. திருவான்மிகைஈஸ்வரர் கோயில் தேவ தானம் அகழிப்பாக்கமான விக்கிரமசோழ நல்லூர் ஏரி எல்லை வரை உள்ள நிலம் பயிர் செய்வதற்கு மாண்பு இல்லாமையினால் வேறொரு நிலம் கொடுக்கப்பட்டதை இக்கல்வெட்டு குறிப்பதாகக் கொள்ளல... கல்வெட்டின் இறுதி இரண்டு வரிகள் இம்மன்னனுடைய மெய்க்கீர்த்தியாக உள்ளன. எனவே இது வேறொரு கல்வெட்டின் ஆரம்பம் எனக் கொள்ளலாம்.

Summary : Two fragments. The first one belongs to Vikrama Chola Deva Year 8 dated 1125-26 A.D. - States that since the lands irrigated by the lake in Vikrama Solanallur in Agalippakkam, a devadana of the templet became unfit for cultivation a certain Uyyavandan Alagiyadevan the headman of Araisur probably reclaimed them (Kulikalli?) The las, two lines are part of the king's Tamil Prasasti.

கல்வெட்டு :

I

1. . . . ஸ்ரீ விக்கிரம சோழ தே[வர்]கு யா[ண்]*டு அவது பெருமுக்கில் திருமலை மேல் திருவான்மிகை ஈஸ்வரம்முடைய மஹாதேவர் கோயிலில்

தேவர் கன்மிகளும் ஸ்ரீமாஹேஸ்வரரும் அரைசூருடையான் உய்ய வன்தாந் அழகிய தேவந் இத்தே[வ]

2. ர் தேவதாநம் அகழிபாக்கமான விக்கிரமசோழ நல்லூர் ஏரி தந் எல்லை முற்றப் பயிர் செய்கைக்கு ரூ மாண்பு இல்லாமையில்லே . . . . . து குழி கல்லி ஏற்[ற . .]டி இவ்வூர் நிலம் விக்கிரம சோழன் வ[தி]

3. க்கு தெற்கு தெற்கு நோக்கி கோல் இருபதும் கணபுரவன் கெ . . . . கு உள்பட குழி.

II

1. மன்னவர் சூட ம[ன்]*னிய [உ]ரிமையி[ல்] மணிமுடி சூடி செங்கோல் நின்று திசை . . .

2. நடாத்தி வலங்கொளாழி வரையாழி நடாத்தி இரு சுடரளவும் இரு கு . . . .

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	13
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1191
ஊர் :	பெருமுக்கல்		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	41
மனனன் :	மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் அர்த்த மண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : அம்மை அப்பன் பாண்டி நாடு கொண்டானான இராஜராஜ சம்புவராயனுக்கு உடலில் உண்டான நோய் தீர வேண்டுமென்று இறந்துபட்ட நாயகப் பெண்டிர்க்கு நன்றாக, திருமலை அடியிலுள்ள சிவகாம சுந்தரி வளாகத்தைச் சேர்ந்த நிலம் இரண்டு வேலியையும், மற்றும் இந்நிலத்திலும் முன்பு பழந் தேவதானத்திலும் பாடிகாவல் வெட்டி, தனியாள் போன்ற வரிகளையும் திருக்காமக் கோட்டத்துப் பெரிய நாச்சியார்க்கு அமுதுபடிக்கு விட்டான் மேற்கூறிய அம்மை அப்பன் பாண்டி நாடு கொண்டானான இராஜராஜ சம்பு வராயன். இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தில் ஈழப்படை, சோழர் மீது தொடுத்த வரலாற்றுப் புகழ் மிக்க போரின் முடிவு சம்புவராயர் அரசியலில் சிறப்பிடம் பெற ஏதுவாயிற்று. இதன் பிறகு சம்புவராயர் தங்களைப் 'பாண்டி நாடு கொண்டான்' என்ற பட்டப் பெயரோடு அழைத்துக் கொண்டனர். இரண்டாம் இராஜாதிராஜனுக்குப்பின் மூன்றாம் குலோத்துங்கன் மூன்றாம் இராஜராஜன் கல்வெட்டுகளில் சம்புவராயர் சிலர் 'பாண்டி நாடு கொண்டான்' என்ற சிறப்புப் பட்டத்தினைக் கூறிக் கொண்டிருந்தனர் என்ற கூற்றுக்குச் சான்றாக இக்கல்வெட்டைக் கூறலாம்.

Summary : Kulotunga Chola III year 13 dated 1190-91 A.D. Ammaiyppan Pandi Nadukondan alias Raja Raja Sambuvarayan gifted two veli of lands in Sivakamasundari Vilakam situated at the foot of the hills, to the Goddess of the temple. The grant was made for the welfere of the chieftain to get cured from some disease and also in memory of his

wife(?) who died. The income from the lands and those from the previous davadana padi kaval lands and certain taxes were also assigned to the Goddess on the sacred hill. (The Chola chieftain Ammaiappan Pandi Nadu Kondan Raja Raja Sambuvarayan played a major role in the Pandian civil war in the reigns of Rajadhi Raja II and Kulohunga III. He figures in the Melsevur record of Rajadhi Raja II Year 13, dated 1179 A.D. vide South Indian Inscriptions Volume XXVII No. 244).

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சி மைக்கித்தி முந்பாக ஸ்ரீ குலோத்துங்க சோழ தே
2. வர்க்கி யாண்டு பதின்மூன்றாவது ஆனி மாதத்து அம்மை அ
3. ப்பன் பாண்டிநாடு கொண்டானான இராஜராஜச் சம்புவராய
4. னுக்குத் தொற்றின உரோகஞ் சாந்தியாக மரித்த நாயகப் பெண்டிர்க்கு
5. நன்றாக இம்மாதம் முதல் திருமலை அடியில் நல்லாலத்தில் சிவகாம
6. சுந்தரி விளாகத்தைச் சேர(ா) விட்ட நிலம் இரண்டு வேலியுந் திருக்
7. காமக் கோட்டத்துப் பெரிய நாச்சியாற்கு அமுது படிக்கு விட்
8. டேன் இந்நிலத்திலும் முன்பு பழந்தேவதானத்திலும் பாடிகாவல்
9. வெட்டி தனியாள் உள்ளிட்ட பலவாயங்க[ளும்] விட்டேன் இராஜரா
10. ஜச் சம்புவராயனேந்

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	7
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1125
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	42
மன்னன் :	விக்கிரமசோழன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் மகாமண்டபக் கிழக்குச் சுவர்

குறிப்புரை : விக்கிரமசோழனின் ஏழாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இது. தந்மபரிபாலபுரம், இராஜேந்திரசோழபுரம் நிலபாடி வீராந்தகபுரம் ஆகிய மூன்று மண்டலங்களைச் சார்ந்த உத்க்ருஷ்ட ஆயோகவர் (நெசவு செய்வோர்) பன்னிரண்டு மனைகளையும் பெற்றுக்கொண்டு திருமலைமேல் திருவான்மிகையீஸ்வரமுடைய மகாதேவர் திருவிழா எழுந்தருளும் போது திருக்கொடி ஏற்றுதற்காகத் துணிகளை வழங்கச் சம்மதித்த செய்தி இதில் கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் அரசகுலப் பெண்ணுக்கும் வைசியகுல ஆணுக்கும் பிறந்தவர்களை ஆயோகவர் என்று அழைத்துள்ளனர். இதுபோன்று உத்க்ருஷ்ட ஆயோகவர் பிராமணருக்கும் வைசியப் பெண்ணுக்கும் பிறந்தவர்கள் என்பதைத் திரிபுவனை மற்றும் திருக்கண்ணபுரத்திலுள்ள விக்கிரமசோழன் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

Summary : Parakesarivarman Vikrama Chola Deva year 7 dated 1125 A.D. The community of the Utkrishta Ayogavas (esteemed weavers) of the three mandalams Dharmparipalapuram, Vela Kani alias Rajendra Cholapuram, Nilapadi Virantakapuram obtained twelve house sites and agreed to supply clothes for flag and to god during festival days. The record states that the Ayogava community is one of mixed caste sprung from royal family woman (rajasthri) and Vaisya man (merchant community). The bride is from the Kshatriya community. The Utkrishta Ayogava, offspring from a Brahmana with a Vaisya woman is already known from two inscription of Vikrama Chola coming from Tirubhuvanai 208 of 1919 and Tirukkannapuram 508 of

1922. The mixed castes called pratilomas as per smriti were assigned honourable services and were even called Utkrishta (the esteemed) A.R.I. Ep. 1922-23 Part II para 35 also refers to Ayogavas the off-spring of a Sudra man and Vaisya woman. For further details please see the Colas by K.A.N. Sastri, Edition 1975- page 549.

கல்வெட்டு :

1. **ஸ்வஸ்திஸ்ரீ** பூமாது புணரப் புவிமாது வளர நாமாது விளங்கச் சயமாது விரும்பத் தன்திரு மலரு மாமன்னவர் சூடச் செங்கோல்
2. செந்று திசைதொறும் வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யறந் தழைப்பக் கலிங்கமிரியக் கடல்மலை நடாத்தி வலங்
3. கொளாழி வண்டமி[ர்]*திரிவித் திலங்கு சுடரளவு(ம்) மொருங்கு குடை நிழற்றி முக்கோட் கிழாநடி(ந)களொடும் விஜய
4. ஸிம்ஹாஸநத்து வீற்றிருந்தருளிய கோற்பரகேசரி **பந்மராந** திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரம சோழதேவர்க்கு யாண்டு ஏழாவது ஜயங்கொ
5. ண்ட சோழமண்டலத்து ஓய்மா னாடான விஜைய ராஜேந்த்ர வள நாட்டுப் பெருமுக்கிலாந கங்கை கொண்டா நல்லூர் திருமலைத் திருவான்மிகையீ
6. ஸ்வர(ம்)முடைய மஹாதேவற்கு திருவிழா வெழுந்தருளுகைக்குத் திருக் கொடி யேறுகைக்குத் திருக்கொடிப் புடவை **தீப்ததிந** படி இடக் கடவோம்
7. ராஜ ஸ்த்ரீ வயிற்றுள் வயிஸ்யநுக்குத் தோற்றிந உற்க்ருஷ்ட ஆயோ ஹரோம் இந்த **தம்ம** எங்கள் **தம்ம**துள்ளா[ர்]* இத்தேவ[ர்]* நிலத்தே பந்திரண்டுமனை எடுத்துக்கொ[கா]
8. [ண்]டு இருந்தா இ.திருக்கொடியும் பந்திரண்டு திருப்பரிச் சட்டமும் மற்று தந்து பிந்நர் வேண்டுவந எல்லா இடக்கடவோம். இச்சமையத் தோம்
9. மூந்று மண்டலத்துக்கும் சமைந்து தந்ம பரிபாலபுரத்து நகரத்தோமும் வேளா காணியாந ராஜேந்த்ர சோழபுரத்து நகரத்தோமும்
10. நிலபாடீயா வீராந்தகபுரத்து நகரத்தோமும் . . . பா . . .

(கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.)

மாவட்டம் : தென்னார்க்காடு

வட்டம் : திண்டிவனம்

ஊர் : பெருமுக்கல்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : விக்கிரம சோழன்

ஆட்சி ஆண்டு : 16

வரலாற்று ஆண்டு : கி.பி. 1129

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 43

இடம் : *முக்யாசலேசுவரர் கோயில் அர்த்தமண்டபக் கிழக்குக் கண்டம்*

குறிப்புரை : *விக்கிரமசோழனின் பதினாறாம் ஆட்சியாண்டில் திருமலைமேல் திருவான்மி கையீஸ்வரமுடையார்க்கு ஒரு திருநுந்தா விளக்கெரிக்கக் காசு கொண்டு செலுத்துவிக்கப்பட்டதை இத்துண்டுக் கல்வெட்டால் அறிகிறோம்.*

Summary : Vikrama Chola Deva year 16 dated 1129 A.D. Seems to be a gift (by a donor whose name is not available) of one sacred perpetual lamp to the god on the sacred hill and also endowment of six kasu for burning the lamp.

கல்வெட்டு :

அ. 1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவந சக்ரவத்திகள் ஸ்ரீவிக்ரமசோள தேவர்க்கு யாண்டு ௧௬ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து காலியூர் ....

2. மலைமேல் திருவான்மிகை ஈஸ்வரமுடையார[க்]*கு நான் வைச்ச திரிநுந்தா விளக்கு ஒன்றுக்கு சந்திராதித்த வரை பொலியூட்டு ஆறு காசு கைக்கொண்டு செலுத்துவீருளி .....

ஆ. 1. கொடம்பாநேன் ஒய்மா

2. இரா இவுண்ணாழிகை ஸபையோ ....

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	8
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி. பி. 1126
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன்பதிப்பு :	—
அரசு :	சோழர்		
மன்னன் :	விக்கிரம சோழன்	ஊர்க் கல்வெட்டு எண்	44

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் மகாமண்டபக் கிழக்குச்சுவர்

குறிப்புரை : இக்கல்வெட்டு ஒரு நிலவிலை ஆவணமாக அமைந்துள்ளது. பெருமுக்கில் நாட்டுப் பழமுக்கில் ஊரார் ஐந்நூற்று இருபது குழிநிலம் விற்க, நித்த விநோத வளநாட்டு அரைசூர் அரைசூர் உடையான் உய்ய வந்தான் அழகிய தேவன் பெற்று அதனைத் திருமலைமேல் திருவான்மிகையீஸ்வர முடைய மஹாதேவர்க்கு அமாவாசிப் புறமாக விட்ட செய்தியினை இக்கல் வெட்டு தெரிவிக்கிறது.

summary : Parakesarivarman Vikrama Chola Deva year 8, dated 1126 A.D. Begins with the king's Tamil prasasti pumadu punara etc. Seems to be a land sale deed. Registers sale of 520 kuli of lands by auction by the urar of Palamukkil. A Certain Uyyavandan chieftain of Araisur of Nittavinota valanadu purchased the lands for three kasu and gifted them to the God Vanmigaieswaram Udaiya Mahadeva on the sacred hill at Perumukkil for conducting services on the days of Amavasya (new moon days). The lands are called Amavasaipuram The village accountant a brahmana by name Kausikan Madavan Malai Kuniya Ninrran figures as a signatory.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமாதுபுணரப் புவிமாது வளர நாமாது விளங்கச் சயமாது விரும்பத் தன்னிருமலரு மன்ன

2. வர் சூடச் செங்கோல் சென்று திசை தெ[ா]*றும் வளர்ப்ப வெங்[க]லி நீங்கி மெய்யறந் தழைப்பக் கலிங்கமிரிய

3. க் கடல்மலை நடாத்தி வலங்கொள[ா]ழி வண்டிமிர் திரிவித் திலங்கு சுடரளவும் ஒருகுடை நிழற்றி விஜைய **சிம்ஹா**

4. ஸநத்து முக்கோட் கிழாநடிகளோடு வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி **பத்மரான** திரிபுவனச்சக்கரவத்திகள் **ஸ்ரீ**

5. விக்ரம சோழ தேவர்க்கு யாண்டு அ வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஒய்மா னாடான விஜை[ய] ர்ாஜேந்தி[ர]*வ

6. ள நாட்டு பெருமுக்கில் நாட்டுப் பழ முக்கிலூரோம் நிலவிலை ஆவணக் கை எழுத்து எங்[க]*ளூர்த் தென் கழனிஇல்

7. கீழ்பாற்கெல்லை தூம்பெழுந்த வாய்க்காலுக்கு மேற்கும் வடபாற் கெல்லை தெற்கில் தில்லை விடங்கனில்

8. தென்வரம்புக்குத் தெற்கும் மேல்பாற்கெல்லை கரம்பு மேட்டுக்குக் கி[ழக்கு]*ம் தென்பாற் கெல்லை அழிகுசில்மேட்டுக்

9. கு வடக்கும் இந்நாற்பேர் எல்லைக்கும் நடுபட்ட குழி பன்னி[ர]டிக் கோலால் குழி ஐநூற்றிருபதும் இந்நிலம் விலைக்கு விற்ப

10. பெறு விலைகாணங் கிழிகைச் செலத் தந்து கொள்வதெனக் கூற இம் மொழி கேட்டு எதிர்மொழி குடுத்தோந் சோழ மண்டல

11. நித்த விநோத வளநாட்டு அரைசூர் அரைசுருடையான் உய்ய வந்தான் அழகிய தேவனெந்னுறோ[1] நீங்கள் முற்சொ

12. ல்லப்பட்ட இன்னிலம் விலைக்கு விற்கி பெறு[2] விலைக்காணங் கிழிகைச் செலத் தந்து கொண்டு பெருமுக்கில் திருமலை மேல் தி

13. ருவா[ன்]*மிகையீஸ்வர(ம்)முடைய மஹாதேவர்க்கு அமாவாஸிப் புறமாகக்கொண்டு விடுவேனென்று கூற முற்கூறிய பழமுக்கில் ஊ

14. ரவரோம் இவ்வுய்ய வந்தான் அழகிய தேவனுக்கு விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்மிலிசைந்த விலைப் பொருள் அன்

15. றாடு நற்காசு மூன்றும் ஆவணக் களியே கிழிகைச் செல அறக்கொண்டு இந்நிலந்தால் வந்த இறைமுறை சில்லிறை சொற்

16. மாட்டு எப்பெர்ப்பட்டதும் கொளக் கடவே[ர] மல்லாதோமாக எம்மிலி சைந்து விற்றுக் குடுத்தோம் பழமு

17. க்கிலூரோம் ஊர்க்குச் சமைந்து ஊர்க்கணக்கு ஊர் ப்ராஹ்மணன் கௌசிகன் மாதவன் மலைகுனிய நின்றா னே

18. ன் இவை என் எழுத்து உ

---

*1 - அழகிய தேவனேந் நானின்றோ - என்று இருத்தல் வேண்டும்

2 - விற்கபெற்று - என்று இருத்தல் வேண்டும்

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	13
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 1131
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	45
மன்னன் :	விக்கிரம சோழன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் அர்த்தமண்டபக் கிழக்கு ஜகதி

குறிப்புரை : விக்கிரம சோழனின் பதின்மூன்றாவது ஆட்சியாண்டில் மாம்பாக்கிழான் நாராயணன் ஆடவல்லான் என்பான் திருநுந்தா விளக்கொன்று எரிப்பதற்குத் தன் காணிப்பற்றான நிலத்தைத் தானமாகத் தந்ததை இக்கல்வெட்டு கூறுகிறது.

Summary : Vikrama chola Deva year 13 dated 1131 A.D. States that Mambakkilan Narayanan Adavallan gifted one sacred perpetual lamp to the temple and also his kani lands for buring the lamp daily.

கல்வெட்டு :

1. . . . கரவத்திகள் சீவிக்கிரம சோழ தேவர்கு யாண்டு ௰௩ஆவது பெரு முக்கி(ல்)லான கங்கைகொண்டா நல் . . . .

2. . . .ராயணன் ஆடவல்லான்நே[ன்]* (ெ)வைச்ச திருநுன்தா விளக்கு ஒன்றுக்கும் என்காணிப் பற்றான

3. . . . ழுவல் வடக்கடைந்த ஒருமாவில் வடக்கடைய [ரு] பந்நீர(ா)டிக் கோ(ல்)லால் குழி

4. . . . மேற்கடைந்த தடி உ ன்நால் நிலம் ஒருமாவில் வடக்கடையத் தடி ச ல் குழிஉா நிய

5. . . . விளக்கு க க்கு சந்திராதித்தவரை செல்வதாக இன் நிலத்தால் வன்த இறைமுறைமை நா. . .

6. விட்டேன் மாம்பாக்கிழா[ந்]* நார[ா]*யண[ன்]* ஆடவ[ல்]*லாநேன் இது பந்மரயேஸ்வர இரக்ஷை

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	8
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1141
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	46
அரசு :	சோழர்		
மன்னன் :	இரண்டாம் குலோத்துங்கன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் திருச்சுற்று மாளிகை தென்புறச்சுவர்

குறிப்புரை : *பெருமுக்கிலான எதிரிலிசோழ நல்லூர் உடையார் திருமலைமேல் ஆளுடையார் கோயில் தேவரடியார் மகள் கோதையாழ்வியான புரவுவரி நங்கை திருக்காமக்கோட்டத்தில் விநாயகப் பிள்ளையாரை எழுந்தருளுவித்ததையும், அவர்க்கு நித்தம் அமுதுபடி செய்ய ஆறுகாசு உபயமாக அளித்ததையும், காசு பெற்றுக் கொண்டு சந்திராதித்தவரை திருவுண்ணாழிகைச் சபையார் அமுதுபடி செலுத்தக்கடவர் என்பதையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. எதிரிலிசோழன் என்பது இரண்டாம் குலோத்துங்கனின் பட்டப்பெயர்.*

Summary : Kulothunga Chola II year 8 dated 1141. Kodaialvi alias Puravari Nangai daughter of the devaradiyar of the temple of the God on the sacred hill in Perumukkil alias Edirilisolanallur consecrated the image of Vinayaka in the goddess shrine The Sabaiyar of thiru unnaligai (priests) received six kasu from her and agreed to offer two nali of rice to god Vinayaka daily so long the sun and moon endure. (Edirilisola was the surname of Kulothunga II).

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு

2. யாண்டு எட்டாவது [பெருமுக்கி]லான எதிரிலிசோழ நல்லூர் உடையார்

3. திருமலை மேல் [ஆளுடையார்] கோயில் திருவுணாழிகை ஸபையோம் உபையம்

4. இக்கோயில் தேவரடி மகள் கோதையாள்வியான புரவுவரி நங்கை திருக்கா

5. மக்கோட்டத்தில் எழுந்தருளிவித்த வினாயகப் பிள்ளையார்[க்]*கு இருநாழி

6. [அரி]சி அமுதுபடி செலுத்தக் கடவோமாக உபையங் கொண்ட பழங் காசு ஆறு

7. இக்காசு கைக்கொண்டு ஸந்திராதி[த்]*தவரை இருநாழி அமுதுபடி
8. செலுத்தக் கடவோமாநோம் இக்கோயிற் திருவுணாழிகை ஸபையோம்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	8
வட்டம் ;	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1251
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	பிற்காலப் பல்லவர்	ஊர்க் கல்வெட்டு எண்	47
மன்னன் :	கோப்பெருஞ்சிங்கன்		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் திருச்சுற்றுமாளிகைத் தென்புறச்சுவர்

குறிப்புரை : இக்கல்வெட்டு முற்றுப் பெறவில்லை: திருமலைமேல் ஆளுடைய நாயனார்க்கு ஏதோவொரு தானம் செய்ததை இக்கல்வெட்டு குறிப்பதாகலாம். ஜெயங் கொண்ட சோழமண்டலத்துச் செம்பூர்க் கோட்டத்துப் பட்டினநாட்டுப் பழம் பட்டினம் என்று குறிப்பிடப்படுகிறது.

Summary : Kopperunjinga year 8 dated 1250-51-Later Pallava-The record stops after mentioning the name of the god on the sacred hill. Mentions the village Palampattinam in Pattinanadu of Samburkottam in Jayangondasolamandalam-incomplete.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சகல புவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ
2. கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு அவது
3. செயங்கொண்ட சோழ மண்டலத்து ஒய்ம[ாநாட]
4. ரன விசைய ராசேந்திர வளநாட்டு பெருமுக்[கி]

5. லான எதிரிலிசோழ நல்லூர் திருமலை மேல் ஆளு

6. டைய நாயனாற்(க்)கு இம்மண்டலத்து செ

7. ம்பூர்க் கொட்டத்துப் பட்டின நாட்டுப் பழம்ப

8. ட்டினத்து*

---

* கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	48
அரசு :	—		
மன்னன் :	—		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் திருச்சுற்றுமதில்-மேற்குப் பார்த்து வைக்கப் பட்டுள்ள துண்டுக் கல்வெட்டு

குறிப்புரை : பெருமுக்கல் மலைமேல் ஆளுடையார் கோயிலுக்குத் திருமந்திரப் போனகப் புறமாக நிலங்களைத் தானமளித்துள்ளான் அரைசூருடையான் உய்ய வந்தான் அழகியதேவன். இந்நிலத்தை . . . னல்லூர் ஊரவரிடமிருந்து ஏலமுறையில் பெற்றுள்ளமையும் அறியப்படுகிறது. மேற்கூறிய அரைசூருடையான் உய்ய வந்தான் அழகியதேவனே விக்கிரம சோழனின் 8-ஆவது ஆட்சியாண்டில் (க.வெ. எண் 31) திருவான்மிகையீஸ்வரமுடையார்க்கு அமாவாசிப் புறமாக நிலம் அளித்துள்ளான்.

Summary : In the character of 12th century-damaged-states that Uyyavandan Alagiyadevan the chieftain of Araisur in Nittavinodavalanadu purchased some lands in auction after paying six kasu to the Uravar of . . . . . nallur and gifted the same to the temple as tirumantirapponaka-puram (for offerings to God). The same chief figures in record No. 31 of Vikrama Chola year 8.

கல்வெட்டு :

1. . . . யார்த் திருத்தில் கீழ்வரம்புக்கு கிழக்கும் குமரன் செறுத் த[டி] . . .
2. . . . விற்றுத் தரக் கொள்வீரில்லையோவெநக் கூற இம்மொழி கேட்டு . . .

3. . . . வினோத வளநாட்டு அரசுருடையாந் உய்யவந்தாந் அழகிய தேே[வ] . . .

4. . . . ல் திருவான்மிகை ஈஸ்வரமுடையார்க்குத் திருமந்திரப் போனகப் புறம . . .

5. னல்லூர் ஊரோம் இவ்வரசுருடையாந் உய்ய வந்தாநழகிய தேவனுக்கு . . .

6. . . . காசு ஆறும் ஆவணக்களியே கிழிகைச் சிலக் கொண்டு விற்றுக் குடு . . .

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி,பி. 12-13ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி ;	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	—
அரசு :	—	ஊர்க் கல்வெட்டு எண்	49
மன்னன் :	—		

இடம் : முக்யாசலேசுவரர் கோயில் திருச்சுற்றுச் சுவர் வடக்குப் பார்த்து வைக்கப் பட்டுள்ள துண்டுக் கல்வெட்டு.

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மாத்தூர் நாட்டு ஒழுகறையான குலோத்துங்கசோழ நல்லூர் மோசுகுளத்தூரைச் சார்ந்த கருப்புழான் வேளான் அடைக்கலப் பொருளானார் இக்கோயிலில் சுப்பிரமணியப் பிள்ளையாரை எழுந்தருளுவித்துள்ளதை இத்துண்டுக் கல்வெட்டால் அறிகிறோம்.

Summary : A certain Karuppulan Velan Adaikkalapporulanar of Mosu(kula)ttur of Kulothunga Sola Nallur alias Olukarai in Matturnadu a sub-division of Jayangondasolamandalam consecrated the image of Subramaniya pil!aiyar (damaged and incomplete).

கல்வெட்டு :

1. செயங்கொண்ட சோழ மண்டலத்து மாத்தூர் நாட்[டு]
2. ஒழுகறையான குலோத்துங்க சோழ நல்லூர் மோசுகு[ள]
3. த்தூர் கருப்புழான் வேளான் அடைக்கலப் பொருளனார்ச்.
4. காரியன் எழுந்தருளுவித்த சுப்பிரமண்ணியப் பிள்ளையா. . . .

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	45
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1115
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	37 of 1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	50
மன்னன் :	முதலாம் குலோத்துங்கன்		

இடம் : (முக்யாசலேசுவரர்) மலைக் கோயிலுக்குச் செல்லும் வழியில் உள்ள பாறையில் வெட்டப்பட்டுள்ளது.

குறிப்புரை : முதலாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியோடு இக்கல்வெட்டுகள் தொடங்குகின்றன. பெரிய பாறையில் வெட்டப்பட்டுள்ள இக்கல்வெட்டுகள் இம்மன்னனின் 16, 43, 45-ஆம் ஆட்சியாண்டுகளில் பலரும் கொடுத்த விளக்குத் தானங்களைக் குறிக்கின்றன. குலோத்துங்கனின் 16-ஆவது ஆட்சியாண்டில் இராஜேந்திர சோழ மும்மலராயனும் 43-ஆவது ஆட்சியாண்டில் சோழமண்டலத்து வண்டாழஞ்சேரி உடையான் வேளான் திருச்சிற்றம்பல முடையானான கிடாரங் கொண்ட சோழ விலாடராயனும், பெருமன்றூர் நாட்டு அரைசூருடையான் வேளான் திருவரங்கமுடையானும் 45-ஆவது ஆட்சியாண்டில் கிடங்கிலில் அரையன் அன்பநாயகன், சேலூர் நாட்டு நுளம்பூர் நுளம்புழான் சொட்டையாழ்வானான சேலூர் நாட்டு வேளானும் விளக்கெரிப்பதற்காகப் பசுக்களைத் தானமாகக் கொடுத்துள்ளனர். இதனைப் பெற்றுக் கொண்டு கோயில் சிவப்பிராமணர் விளக்கெரித்த செய்தியும் இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. 45-ஆம் ஆட்சியாண்டில் அளித்த தானம் குறிக்கப்படுவதால் 45-ஆம் ஆண்டிலோ, அதன் பின்னரோதான் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

Summary : Rajakesarivarman Kulothunga Chola I of Accession 1070. Begins with the king's Tamil prasasti pugalmadhu vilanga etc. It is a consolidated document registering the grants made by several persons in the 16th, 43rd and 45th years of the king. In the 16th year of the king, Rajendra Sola Mummalarayan gifted one sacred perpetual lamp and thirty cows.

In the 43rd year of the king, Kidarangonda Sola Viladarayan alias Velan Tiruchirrambalamudaiyan headman of Vandalancheri in Cholamandalam gifted one sacred perpetual lamp and thirty cows. In the same year Velan Tiruvarangamudaiyan headman of Araisur in Perumanrur nadu gifted one sacred perpetual lamp and thirty cows. In the 45th year of the king, Anba Nayakan donated a Sandhi lamp and twelve sheep. Nulambulan Sottai Alwan alias Sevvurnattu Velan of Nulambur in Sevvurnadu gifted one sandhi lamp and twelve sheep. The Sivabrahmanas of the temple agreed to burn the two sandhi lamps and the three perpetual lamps daily so long the sun and moon endure.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்கச் சயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர் மகள் புணர

2. உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனை மந்நவர்

3. இறியலுற்றிழிதரத் திக்கனைத்துந் தந் சக்கர நடாத்தி வீர ஸிம்காஸனத்து புவனமுழுது

4. டையாளொடும் வீற்றிரு[ந்தருளி]* ய கோவிராசகேசரிபர்மராந திரிபுவநச் சக்கரவத்திகள் ஸிரி

5. குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு பதினாறாவதின் ஓய்மா நாடாந விசைய ராசே

6. ந்திர வளநாட்டுப் பெருமுக்கில் திருமலைத் திருவாந்மீசுரமுடையமாதே[வ]ற்கு இராஜேந்திர சோழ

7. மும்மலராயந் விட்ட திருநுந்தாவிளக்கு ஒந்றிநால் சாவா மூவாப் பசு முப்பதும் இத்தேவர்க்கு யாண்டு

8. நாற்பத்து மூன்றாவது சோழமண்டலத்து வ டாழஞ்சேரி உடையாந் வேளாந் திருச்சிற்ற

9. ம்பலமுடையானாந கிடாரங் கொண்ட சோழ விலாட ராயந் இத் திருவாந்மீசுரமுடை

10. ய மாதேவற்கு விட்ட திருநுந்தா விளக்கொந்றிநாற் சாவா மூவாப் பசு முப்பதும் பெரும்மந்றூர் நா

11. (ர)ட்டு அரைசூருடையாந் வேளாந் திருவரங்கமுடையாந் இத்தேவற்கு விட்ட திருநுந்தா விளக்கு

12. ஒந்றிநாற் சாவாமூவாப் பசு முப்பதும் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு

13. நாற்பத்தஞ்சாவதில் திருமலை திருவாந்மீசுரமுடைய மாதேவற்கு கிடங்கிலில் அரையந்

14. அந்ப நாயகந் விட்ட சந்திவிளக்கு ஒன்றிநாற் சாவா மூவாப் பேராடு பந்நிரண்டும் ஸ்ரீகுலோத்துங்க

15. சோழதேவற்கு யாண்டு நாற்பத்தஞ்சாவது சேவூர் நாட்டு நுளம்பூர் நுளம்புழர்ந் சொட்டையாழ்வாநாந சே

16. வூர் நாட்டு வேளாந் இத்திருமலைத் திருவாந்மீசுர(ம்)முடைய மாதேவற்கு விட்ட சந்திவிளக்கு ஒந்றிநாற் சாவா மூவா

17. ப்பேராடு பந்நிரண்டும் இச்சந்தி விளக்கிரண்டும் திருநுந்தா விளக்கு மூந்றும் இவை கைக்கொண்டு சந்திராதித

18. வற் செலுத்தக் கடவோமாநோம் இக்கோயிலில் சிவப்பிராமணரோம் ஆத்திரையந் திருச்சிற்றம்பல பட்டந்

19. அம்பலங் கோயில் கொண்டாநும் ஆத்திரையன் பஞ்சநெதி அறிவாள பட்டநும் ஆத்திரையந் உலகந் கணவதி பட்டநு[ம்]*

20. இவனைவோமுங் கைக்கொண்டோம் இது பந்மாயேஸ்வர ரக்ஷை.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 13—14-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	51
அரசு :	—		
மன்னன் :	—		

இடம் : (முக்யாசலேசுவரர்) மலைக் கோயிலுக்குச் செல்லும் வழியில் உள்ள பாறை

குறிப்புரை : மலைக்குச் செல்லப் படி அமைத்திருப்பதைக் குறிப்பதாகலாம். 12 என்று தமிழில் எண் எழுதப்பட்டுள்ளது.

Summary : In the character of 13—14th century - States Step number 12 - (?)

கல்வெட்டு :

1. உயர்த்தி
2. திருத்தாமி
3. படி ௰உ

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	17
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி. பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	பதிப்பு :	—
அரசு :	பாண்டியர்		
மன்னன் :	(மூன்றாம்) சடையவர்மன் சுந்தரபாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	52

இடம் : மலையடிவாரத்திலுள்ள சிவன் கோயில் அர்த்தமண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : இக்கல்வெட்டு மலையடிவாரத்திலுள்ள சிவன் கோயிலில் காணப்பட்டாலும், மலைமேல் ஆளுடையார் கோயிலுக்குக் கொடுத்த தானத்தையே குறிக்கிறது. கி.பி. 13- ஆம் நூற்றாண்டில் அரசு செலுத்திய சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலத்துக் கல்வெட்டு இது. இதில் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஒய்மா நாடான விசையராசேந்திர வளநாட்டுப் பெருமுக்கி லான எதிரிலி சோழ நல்லூரில் திருமலைமேல் ஆளுடைய நாயனார்க்கு இரவு நேரத்து அர்த்தசாமப் பூசைக்கும், அர்த்தசாமப் பூசை முடிந்த பின் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் கோயிலில் திருப்பள்ளி (அறையில்) எழுந்தருளி, ஏறியருளி அமுது செய்தருளுவதற்கு அடுதுபடிக்கும், கறி அமுதுக்கும் திருவிளக்கெண்ணைக்கும் காணியாக நிலம் தானமளிக்கப்பட்டது. இந்நிலம் குழி எழுநூற்று ஐம்பதும் கார் பசானம் மற்றும் அனைத்து ஆயங்களும் உட்பட அளித்தவன் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஒய்மா நாடான விசையராசேந்திர வளநாட்டுப் பேராயூரான இராசராச நல்லூர் நென்மலி கிழான் அரயன் ஆசிரியமழகி யான சேதிராயன் என்பான். மேற்படி சந்தி நடைபெறுவதற்காகத் திரு நாமத்துக் காணியாக விடப்பட்ட இந்நிலத்தின் வருவாய் மூலம் கோயிற் காரியங்கள் சந்திராதித்தவரை நடைபெற வேண்டுமென்று இக்கல்வெட்டு கூறுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்ற பெயரில் மூவர் வெவ்வேறு காலங்களில் ஆட்சி புரிந்துள்ளதை வரலாற்றால் அறிகிறோம். இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளவனின் காலத்தை இரண்டு காரணங்கள் மூலம் ஓரளவு ஊகித்தறிய இயலும். முதலில்

இக்கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இக்கல்வெட்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது எனக் கொள்ளலாம். அடுத்து இப்பெயரால் ஆண்ட மன்னர் மூவர். ஒருவன் கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மற்ற இருவர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஆட்சி புரிந்துள்ளனர். அரசியல் வரலாற்றையும், கிடைத்துள்ள கல்வெட்டு களையும் ஒப்புநோக்கி ஆய்வு செய்து பார்த்தால் கி.பி. 1278-1301 வரை ஆட்சி புரிந்த மூன்றாம் சடையவர்மனே இக்கல்வெட்டுக்குரியவன் என்று கொள்ள இடமளிக்கிறது. காரணம் இவன் காலக் கல்வெட்டுகள் தஞ்சை மற்றும் தென்னார்க்காட்டுப் பகுதிகளில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டில் மன்னனு டைய பட்டப்பெயர்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. பொதுவாகப் பிற் காலப் பாண்டியர் ஏதேனும் பட்டப்பெயர் கொண்டே கல்வெட்டுகளை வழங்கியுள்ளனர். இம்மன்னன் மட்டுமே பட்டப்பெயரின்றிக் கல்வெட்டு களைப் பொறித்துள்ளான் என்பதாலும், இவனுடைய கல்வெட்டுகளே இப் பகுதியில் காணப்படுகின்றன என்பதாலும் இக்கல்வெட்டு கி.பி. 1278-ல் ஆட்சி புரிந்த மூன்றாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனுடையது என்று கொள்ளலாம்.)

Summary : Engraving is in the character of 13th century - Sadaiyavarman Sundara Pandya year 17th - In the 13th century there were three Sadaiyavarman Sundara Pandyas of accession 1250, 1277 and 1278. The record belongs to one of them. States that Araiyan (officer) Asiriyamalagiyan Sedirayan the headman of Nenmali in Rajarajanallur alias-Peraiyur in Vijayarajendra valanadu alias Oymanadu a sub-division of Jayangondasolamandalam gifted 750 kuli of lands as tirunamattukani to the God on the sacred hill in Perumukkil alias Edirilisolanallur of this nadu a sub division of Jayangondasolamandalam. The kar pasanam and also the entire income (ayam) are to be utilised for offering food, vegetables and oil for lamps to the image of the goddess when She is taken to the bed chamber (palli-arai) in the goddess shrine. It is said that the image of the goddess is taken to the bed-chamber after the completion of the ardhajama services in the night.

கல்வெட்டு :

1. **ஸ்வஸ்திஸ்ரீ** கோ
2. ச்சட பன்மரான
3. திரிபுவனச் சக்கரவத்

4. திகள் சீ சுந்தர பாண்டிய
5. தேவர்க்கு யாண்டு பதின்
6. ஏழாவது மீனநாயற்றுத்
7. தியதி பதின்ஒன்றினால் ஜய
8. ங்கொண்ட சோழ மண்ட
9. லத்து ஒய்மா நாடான விசை
10. யராசேந்திர வளநாட்டுப்
11. பேராயூரான இராசராச நல்லூ
12. ர் நென்மலி கிழான் அரயன் ஆசி
13. ரியமழகியான் சேதிராயனேன்
14. இம்மண்டலத்து இன்னாட்டு
15. பெருமுக்கிலான எதிரி[லி]* சோழ
16. நல்லூர் உடையார் திருமலை
17. மேல் ஆளுடைய நாயனார்க்
18. கு இரர்க்காலம் திரு அத்தசாம
19. க் காலம் பணி ம[ட]
20. ங்கி திருக்காமக்கோட்ட
21. முடைய பெரிய நாச்சியா
22. ர் கோயிலுக்கு திருப்பள்ளி
23. அந்துளாகத்தில் எழுந்
24. தருளி ஏறியருளி அமுதுசெ
25. ய்தருள அமுதுபடிக்கும் க
26. றி அமுதுக்கும் திருவிளக்கெ
27. ண்ணைக்கும் விட்ட பழமுக்கில்
28. கழனியில் எங்கள் காணியான
29. நிலத்தில் தூம்படியில் நின்று

30. ம் தெற்கு நோக்கிப் போன காலு
31. க்கு மேற்கு அரைமலையாழ்வார்
32. திருவுடையாட்டத்துக்கு தெற்கு
33. குடிநீங்காத் தேவதானமாக வி
34. ட்ட பதினாலு அடிக்கோலால்
35. கண்டு விட்ட தடி நாலி
36. னால் குழி நானூறும் க[ரு]
37. ங்காலியான தடி மூன்
38. றினால் குழி முன்னூற்று ஐ
39. ம்பதும் ஆக தடி ஏழினா
40. ல் குழி எழுநூற்று ஐ
41. ம்பதும் கார் பசானம்
42. அனைத்தாயங்களு
43. ம் உட்பட நாட்டு இ
44. றையிலியாக இச்ச
45. ந்திக்கு இப்படி
46. செல்லுவதாக சி
47. லாலேகை பண்
48. ணிக் குடுத்தேன்
49. நென்மலி கிழான்
50. அரையன் ஆசிரிய
51. ம் அழகியான்
52. சேதிராயனேன் இ
53. ச் சந்திக்கு விட்ட இன்னி
54. லங் கொண்டு இப்படி
55. சந்திராதித்த வரை செ
56. ல்வதாக திருநாமத்து
57. காணியாக குடுத்தேன்.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	சகம்: 1468
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1546
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	53
அரசு :	விஜயநகரர்		
மன்னன் :	சதாசிவதேவ மகாராயர்		

இடம் : மலையடிவாரத்திலுள்ள சிவன் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : விஜயநகர மன்னன் சதாசிவராயர் காலத்தைச் சார்ந்த கல்வெட்டு. வானிலைக் குறிப்பு கீலக வருடம், கன்னி (புரட்டாதி) மாதம் புதன்கிழமை என்பது சகம் 1470-ஐக் குறிக்கிறது. ஆனால் இதில் சக ஆண்டு 1468 என்று தவறுதலாகக் குறிக்கப்பட்டுள்ளது. வேட்டைவல்லம மாணிக்க வாணாதராயர் என்பார் திருமலைமேல் எழுந்தருளியுள்ள இறைவனுக்குக் காலசந்திக்காக நிவந்தம் அளித்த செய்தி இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Summary : Vijayanagar emperor Sadasivaraya-Saka 1468 mistake of 1470 cyclic year Kilaka, month kanni Su . . . Wednesday dated September 1548 A.D. States that a certain Vettai Vallama Vanadarayar gifted lands to the god Tirumalavudaiya Tambiranar for Kala sandhi service.

கல்வெட்டு :

1. ஸுப மஸ்
2. த்து சுவஸ்தி
3. ஸ்ரீமத் சதாசிவ
4. தேவ மகாராய

5. ர் பிறிதி இராச்சிய
6. ம்(ப்) பண்ணி அ
7. ருளா நின்ற ச
8. காற்த்தம் சூ^சா
9. கூம்அன் மேல்
10. செல்லா நின்
11. ற கீலகஞூ க
12. ன்னி நாயற்று
13. பூறுவ பக்ஷத்து
14. தெசமியும் ரெபதி
15. யும் பெற்ற புத[ன்]
16. வாரத்து நாள்
17. பெருமுக்கில்
18. திருமலாவுடை
19. ய தம்பிரானாற்
20. கு காலசந்திக்
21. கு வேட்டை
22. வல்லம
23. மாணிக்க வா
24. ண" தராயர் கு
25 ... சாதமாக
26. வேட்டை வல்ல

27. த்து சீர்மையா

28. ன தேவர் பிடா

29. கைக்குள்ப் பக்கம்

30. சந்திராதித்த வரை

31. க்கும் நடக்க க[டை]

32. வது ஆகவும் இது

33. க்கு அகுதம் பண்ணி

34. னவன் காராம் பசு . . . . . .

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	54
அரசு :	—		
மன்னன் :	—		

இடம் : மலையடிவாரத்திலுள்ள சிவன்கோயில் கருவறை தெற்குச்சுவர்

குறிப்புரை : கல்வெட்டு பெரிதும் சிதைந்துள்ளது.

Summary : Much damaged

கல்வெட்டு

1. விரோதிவருஷ
2. ம் ஆடி மீ உ௰அ வ
3. பெருமுக்கில்
4. ஸ்ரீ பண்டார . .
5. ன்ற ஊர் வரு
6. ம் காவல் . .
7. ம்மைகளுக்கு
8. நெல் . . .

9, சாதனம் பண்ணி

10. குடுத்தபடி நஞ்

11. சை....

12. திக்கு....

13. க்கு தெற்கு வடக்கு

14. கிழக்கு மேற்கு... எல்லா மகமை ம

15. பணம் குடுத்தஷி உ(ரு) இந்த

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	சகம் 1490
வட்டம் ;	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1568
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	55
அரசு :	—		
மன்னன் :	—		

இடம் : மலையடிவாரத்திலுள்ள சிவன் கோயில் கருவறை தெற்குச்சுவர்

குறிப்புரை : *வானிலைக் குறிப்பு சுக்கில வருடம் ஆவணிமாதம் 12-ந் தேதி என்பது சகம் 1491-ஐக் குறிக்கிறது. ஆனால் கல்வெட்டில் ஆண்டு மட்டும் 1490 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொப்பநாயக்கர், கோயில் ஸ்ரீபண்டாரத்தார், மற்றும் செங்குந்தர் ஆகியோர் கோயிற் திருப்பணிக்கெனப் பொன்னம்பல நாயக்கர் வசம் காணி ஆட்சியாக நிலம் கொடுத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது*

Summary : Saka 1490 mistake for 1491 cyclic year Sukla, month Avani, 12th solar day which correspond to Thursday 11th August 1569 A.D. Gopanayakar, the officers of the temple treasury, the pontiffs of the mata and the weavers (sengundar) probably granted some kani lands to Ponnambala Nayakar for repairs to the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மன்
2. சகாசூம் சூசகூம
3. க்கு மேல் செல்லா நி
4. ன்ற சுக்கல வரு ஆ

5. வணி மீ டிச உ வே

6. லூர் கொப்பனாய

7. க்க(ர)ரும் பெருமு

8. க்கில் கோயில் ஸ்ரீ

9. பண்டாரத்தாரும்

10. செங்குந்தரும் பெ

11. ரு முக்கில் கோயில்

12. தங்காணம் மாடா

13. பத்தியம் பரதேசத்

14. தாரையும் கணக்கு

15. எழுத்தும் காஞ்சிபு

16. ரம் ஞான பிறகாச

17. பண்டாரத்தி [.......]

18. திருப்பணி பொன்ன

19. ம்பல நயினார்க்கு கா

20. ணி ஆஷ்ஷிக்கு கட்ட

21. ளையிட்டோம் இந்தப

22. டிக்கு சந்திர ஆதித்த

23. ந் வரைக்கும் புத்தி

24. ர புத்திர தலைமுறை

25. யாக நடத்த கட

26. வோம் ஆகவும் யிந்

27. த காணி ஆஷ்ஷிக்கு

28. அகுதம் பண்ணிந

29. வன் கெங்கை கரை

30. யிலே காராம் பசுவை

31. வ கொன்ற தோ

32. ஷத்திலே போக

33. கடவர் ஆகவும்

34. தாநத்தா[ர்]

35. செங்குந்தர்

36. கோயில் கண

37. க்கு திருவேங்க

38. டநாதர் திருமே

39. னி காவல் லி

40. ங்கப்பர்

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	6
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 14 - ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	56
மன்னன் :	மாறவர்மன் வீரபாண்டியன்		

இடம் : மலையடிவாரத்திலுள்ள சிவன் கோயில் அர்த்தமண்டப மேற்குச் சுவர்.

குறிப்புரை : இக்கல்வெட்டு மாறவர்மன் வீரபாண்டியன் காலத்தது. இக்கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இதனைக் கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம். இக்காலகட்டத்தில் மாறவர்மன் வீரபாண்டியன் என்ற பெயரில் இரண்டு அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். கல்வெட்டில் வானிலைக் குறிப்பு ஏதும் கொடுக்கப்படவில்லை என்பதால் எந்தக் குறிப்பிட்ட மன்னனுடையது என்று கூற இயலவில்லை. திருமலைமேல் ஆளுடைய நாயனார்க்குத் திருநாள் சந்தி திருப்பணி ஆகியவற்றுக்கு 25பொன் அளித்து அதனால் வந்த அனைத்து ஆயங்களும் உட்பட இறையிலி செய்து கொடுக்கப்பட்டதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. புரட்டாதித் திருநாளுக்கும் அறமிறங் கானாட்டுச் சந்திக்கும் திருப்பணிக்கும் உடலாக அளிக்கப்பட்டுள்ளது. இத் தானத்திற்குச் சாட்சியாக அதிகாரிகள் பலரும் கையெழுத்திட்டுள்ளனர்.

Summary : Maravarman Vira Pandya of accession either 1334 or 1341 year 6 States that upto the fifth year of the king twenty five coins of gold were collected from different sources like devadana lands and other income. Seventeen coins were spent for Purattathi festival and repairs to the temple of the God on the sacred hill. The expenses of these seventeen gold coins were treated tax free. Several officers figure as signatories.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறுப
2. ன்மரான திருபுவனச்ச

3. க்கர வத்திகள் ஸ்ரீவீ
4. ரபாண்டிய தேவற்க்கு யா
5. ண்டு ஆறாவது முதல்(ல்) உ
6. டையார் திருமலை மேல்
7. ஆளுடைய னாயனார்(ற்)க்கு பூரட்
8. டாதித் திருநாளுக்கும் அறமிறங்
9. கானாட்டுச் சந்திக்கும் திருப்ப
10, ணிக்கும் உடலாக இந்த நாய
11. னார் தேவதானம் பெருமுக்கில்
12. காற் கடமைக்கும் ஆயத்துக்கு
13. ம் பல தளி வகுப்புக்கும் அஞ்சாவது
14. வரை வகுப்பின் படி பூண்ட பொன்
15. இருபத்தஞ்சு இதில் இத்திருநாளுக்
16. கும்(ச்)சன்திக்கும் திருப்பணிக்
17. கும் கழித்த பொன் பதிந் ஏழு இ
18. ப்பொன் பதின் ஏழால்(ல்) வன்த
19. அனைத்தாயமும் உட்(ப்)பட எப்ே
20. பற் பட்ட உபாதிகளும் உட்ப
21. ட நாட்டு இறையிலி ஆக கழி
22. த்துக் குடுத்தோம் இப்படிக்கு இ
23. வை பனைப் பாங்கிமையான்
24. எழுத்து இப்படிக்கு இவை கடம்
25. புழையான் எழுத்து
26. இப்படிக்கு இவை இரா
27. ச நாராயண மூவே
28. ந்தவேளாந் எழுத்து

29. இப்படிக்கு இவை கொ
30. ள்ளி பாக்கிழாந் குலோ
31. த்து[ங்]க சோழப் பல்லவ
32. ரையந் எழுத்து இப்படி
33. க்கு இவை குருகுலத்தரைய
34. ந் எழுத்து இப்படிக்கு இ
35. வ செ[ய]*ங் கொண்டசோழ மூ
36. வேந்த வேளாந் எழுத்து இப்
37. படிக்கு இவை பாகலல் கி
38. ழாந் வேளாந் சொக்கந் எழு
39. த்து இப்படிக்கு இவை அமா
40. திய ராயந் எழுத்து இப்படிக்
41. கு இவை பைசாறுடையான் சி
42. ங்களத்தரையந் எழுத்து இப்ப
43. டிக்கு இவை முனையதரையந் எ
44. ழுத்து இப்படிக்கு இவை ஒயிமா
45. நாட்டு வேளாந் எழுத்து
46. இப்படிக்கு இவை
47. விக்கிரம சோழ மூவேந்த வேளாந் எ
48. ழுத்து.

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு	கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்		
அரசு :	—	ஊர்க் கல்வெட்டு எண்	57
மன்னன் :	—		

இடம் : மலையடிவாரத்திலுள்ள சிவன் கோயில் திருச்சுற்று மேற்குப் பார்த்த தூண்

குறிப்புரை : பேராயூரைச் சார்ந்தவன் தூண் ஒன்றினைச் செய்தளித்துள்ளான் என்பது தெரியவருகிறது. கல்வெட்டு சிதைந்துள்ளமையினால் அளித்தவன் பெயர் அறியக்கூடவில்லை.

Summary : States that this pillar is the gift of .... a person (name lost) of Peraiyur.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. இக்கால் செ
3. ய் வித்தான்
4. பேராயூர் புர
5. ... சிவன் சிவ ...
6. த முன் அம்ம ..

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	16-ஆவது
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 987
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	--
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	58
மன்னன் :	உத்தமசோழன்		

இடம் : ஆஞ்சநேயர் கோயில் முன்புறம் உள்ள பலகைக் கல்லில் உள்ளது.

குறிப்புரை : தற்போது இக்கல்வெட்டு தற்காலக் கோயிலமைதி கொண்ட ஆஞ்சநேயர் கோயிலில் உள்ளது. உத்தம சோழன் காலத்துக் கோயில் ஒன்று இவ்வூரில் இருந்து அழிவுற்றிருக்க வேண்டும். தனிக்கல் மட்டும் ஆஞ்சநேயர் கோயிலில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அம்பலவன் கண்டராதித்தன் என்பவன் திருக்கற்றளி எடுத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

Summary : Uttamasola, year 16 dated 987 A.D. States that this temple was built of stone by Ambalavan Gandaradittan. It is obvious that this record does not belong to this temple and was brought from some nearby ruined temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ உத்தமசோழற்கு யாண்
2. டு மதினாறாவது இத்திருக்க
3. ற்றளி எடுப்பித்தான் அம்பல
4. வன் கண்டராதித்தன்

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 11-12ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி ;	தமிழ்	முன் பதிப்பு	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	59
அரசு :	—		
மன்னன் :	—		

இடம் : ஆஞ்சநேயர் கோயிற் படிக்கல்

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு

Summary : In the character of the 12th century - damaged - indistinct - mentions tax free grant of lands by the villagers of Perumukkil probably for burning a lamp.

கல்வெட்டு :

1. ....இச்சுட்டப்பட்ட நிலம் விளைக்கொண்....
2. ....றையிலியாக விற்றுக் குடுத்தோம் நக்கன்..
3. . பெருமுக்கிலூரோம் இதை ஸ்ரீ கோயிலுடை
4. ....கைப் பெருமக்களோ மிந்நிவந்தப்படி கொண்ட...
5. னொம் விளக்கவிஞ்சால் படி இட்டியெரிப்பெ....
6. விழாமை இருசார்பு நேர்முப்பாடுங் கேட்டு....
7. . . ந்து ஆவணங் கைய்யெழிதினேன் னிவ்வூர்
8. கிழான் கொற்ற சந்மன் சிங்கசந்மனேன்

மாவட்டம் :	தென்னார்க்காடு	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	திண்டிவனம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
ஊர் :	பெருமுக்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு	ஆவணம் இதழ் 3 சூலை 1993
அரசு :	—	ஊர்க் கல்வெட்டு எண்	60
மன்னன் :	—		

இடம் : பெருமுக்கல் ஊரின் எல்லையிலுள்ள ஏரித்தூம்பில் உள்ளது.

குறிப்புரை : ஏரியின் தூம்பைச் செய்வித்தவன் இராஜராஜ வளநாட்டுப் பொய்யிற் கூற்றத்துக் கோனூருடையான் அரையன் காக்குநா(ய)*கந் என்பான் என்பது இக்கல்வெட்டால் அறியப்படுகிறது.

Summary : It seems to refer that the sluice was constructed by Araiyan Kakkunayakan, a native of Konur in Poyyir kurrum, a subdivision of Rajaraja valanadu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இராஜ இராஜ வள
2. நாட்டு பொய்யிற் கூ
3. ற்றத்து கோனூருடையா
4. ந் அரயன் காக்கு நாகந்*

* ஏரியில் நீர் நிறைந்திருந்ததால் இக்கல்வெட்டினை இத்துறையால் படியெடுக்க இயலவில்லை. இக்கல்வெட்டில் கொடையளித்தவன் பெயர் காக்குநாயகந் என்று இருந் திருத்தல் வேண்டும்.

பிழை திருத்தங்கள்

எண்	பக்கம்	பிழை	திருத்தம்
1	3	திருவான் துகை ஈஸ்வரருக்கு	திருவான்மிகை ஈஸ்வரருக்கு
2	3	தாஸ் எழுந்தருளுவித்த	தான் எழுந்தருளுவித்த
3	79	செ[யங்]கொண்ட சொழ மண்டலத்து ஓய்மா நாட்டு சேம்பெடாந பாகண்ட	செ[யங்]கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாட்டு செம்பேடாந பாகண்ட
4	83	Ammaiyppan	Ammaiyappan
5	120	டு மதினாறாவது	டு பதினாறாவது
6	வெளியீட்டு விவரப்பக்கம்	பெருமுக்கல் கல்வெட்டுக்கள்	பெருமுக்கல் கல்வெட்டுகள்